Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-02 15-03-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 25

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11455)

## பெண்கள் மீதான இராணுவ வன்முறைக்கு எதிராக யாழ்.இல் ஆர்ப்பாட்டப்பேரணி ; மகஜர் கையளிப்பு

யாழ். நீர்வேலிப்பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் மூதாட்டி மீது பாலியல் வல்லுறவு புரிய மேற்கொண்ட முயற்சி மற்றும் பெண்கள் மீதான இராணுவ வன்முறைகள் என்பவற்றைக் கண்டித்து நேற்றுப் பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ். வலிகாமம் கிழக்கு பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இப் பேரணி யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கோவில் வீதியூடாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகம் வரை சென்றது.

படையினரின் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கண்டிக்கும் கோசங்களுடன் இடம் பெற்ற இப் பேரணியின் முடிவில் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் ரொணிபேர்ஸ்னிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதில் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார்பொன்னம்பலம் மாவை சேனாதிராசா கி.சிவநேசன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் , மாதர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து செல்வி ப.மகிழினி தலைமையில் கைலாச பிள்ளை ஆலய முன்றலில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)




## - நோர்வே தெரிவித்த யோசனைகளுக்கு -

# அரசாங்கத்திடமிருந்து பதில் கிடைக்காமையால்

# முழுமையான இணக்கப்பாட்டிற்கு வரமுடியாதுள்ளது

## அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

**சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச உதவிகள் பகிர்வது தொடர்பில் நோர்வே தெரிவித்தயோசனைக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்காமையால் முழுமையான ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியாத சூழல் இருப்பதாக அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பி.பி.ஸிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐரோப்பிய நாடுகளுக்கு நாங்கள் இம்முறை பயணம் மேற்கொண்டதன் நோக்கம் இரண்டு விடயங்களுக்காக, அவை தற்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமைகள் -சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக யுத்த நிறுத்த சூழலைத் தொடர்ந்து கடைப்பிடிக்கின்ற பொழுது அதில் வருகின்ற சிக்கல்கள் பற்றி நாங்கள்,குறிப்பாக நோர்வேக்கும் ஏனைய நாடுகளுக்கும் விளக்க இருக்கின்றோம்.

இதேவேளை மிகமுக்கியமாக சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சர்வதேச உதவிகளை எங்களுடையதாயகப் பிரதேசத்திற்கும் திருப்புவதற்காக சர்வதேச சமூகத்தினுடைய அக்கறையைத் தூண்டும் முகமாக நாங்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் வல்லுறவுக்கு முயற்சித்த சிப்பாய் அடையாளம் காணப்பட்டார்

யாழ்.நீர்வேலிப்பகுதியில் மூதாட்டி ஒருவரைப்பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சி செய்த இராணுவச் சிப்பாய் அடையாளம் காணப்பட்டுள்ளார். மேற்படி சம்பவத்துடன் தொடர்புள்ள இராணுவச்சிப்பாயை இனம்கண்டு அவர்மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நேற்றைய தினம் காலை 9.00 மணியளவில் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்ற அடையாள அணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.அரசியல்துறை செயலகம் மீது நேற்றிரவு கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு அரசியல் துறை அலுவலகம் மீது நேற்றிரவு 7.25 மணியளவில் இனந்தெரியாதோரால் ஒரு கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.




கைக்குண்டு விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறை அலுவலகத்தினுள் விழுந்து வெடித்துள்ளபோதும், பெரிதாக சேதமெதுவும் ஏற்படவில்லை எனப் பிரதேச

(12ஆம் பக்கம் பார்க்க)

## -ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து-

## திருமலையில் நேற்று கதவடைப்பு வீதி மறியலிலும் மக்கள் ஈடுபட்டனர்



(திருமலை)

திருகோணமலையில் நேற்றுப் பூரண கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினால் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்தக் கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

திருமலையில் உள்ள தமிழ், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மற்றும் சிங்கள வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. சந்தைகள்,வங்கிகள்,பாடசாலைகள், மாகாணசபை மற்றும் நகரசபை அலுவலகங்கள் அனைத்தும் இயங்கவில்லை. மாவட்டச் செயலகத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## -வடமராட்சி புலோலியில்-

## கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மாணவனின் சடலம் மீட்பு

யாழ். வடமராட்சியில் மாணவர் ஒருவர் சுருக்கிட்டு இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். வேலாயுதம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த உயர்தர கணிதப்பிரிவைச் சேர்ந்த மாணவனே வீட்டை அடுத்துள்ள வெற்றுக் காணியில் சுருக்கிட்டு இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 7.30 மணியளவில் இருந்து காணாமல் போன துரையப்பா வளவு,அரசடி ஒழுங்கை,

(12ஆம் பக்கம் பார்க்க)

## பெயர் மாற்றம்

நான் 15-09-1980 அன்று பிறந்தபோது துஷ்யந்தி பிரியதர்சினி என பெற்றோர் இட்ட பெயரை 02-03-2005 இல் இருந்து துஷ்யந்தி என மாற்றம் செய்துள்ளேன்.

தகவல்.
துஷ்யந்தி

(5798)

# "பார்த்தீனியம்" விஷச்செடியை கட்டுப்படுத்த வேண்டும்!


## -விவசாயிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பல பகுதிகளிலும் உள்ள விவசாய நிலங்களில் "பார்த்தீனியம்" என்ற விஷச்செடியின் பரவல் அதிகம் காணப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக்களத்தினரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர்.

குறிப்பாக இந்தப் பார்த்தீனியச் செடியின் பரம்பல் யாழ். நகர்ப்பகுதியிலும் மற்றும் வலிகாமம்பகுதி விவசாய நிலங்களிலும் அதிகம் காணப்படுகின்றன. (33)

## 31 ஆம் நாள் நினைவலைகளும், நன்றி கூறலும்



தோற்றம்:-10.02.1966

மறைவு :-13.02.2005

அமரர்
நடராசா பாஸ்கரன் (கரன்

14.02.2005 ஞாயிறு இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டும், சரீர உதவி ஒத்தாசைகள் புரிந்தும், துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அபி இல்லம்,
213/2 திருவையாறு,
கிளிநொச்சி.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்

(5853)

## பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை இடம்பெறவுள்ளது. லண்டனில் இருந்து வருகை தந்திருக்கும் வைத்திய நிபுணரான பிலிப்ஜேன் இச்சத்திரசிகிச்சை களை மேற்கொள்ளவுள்ளார்.

### வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

சந்திரதாஸ் சந்திரபிரபாகரன் (குமரபுரம், பரந்தன்) என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல.710084076-V கிளிநொச்சி நகரில் வைத்து 04.03.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை, கிளி நொச்சியில் ஒப்படைக்கவும். தகவல் ச.சந்திர பிரபாகரன். (5851)


**ஒப்புநோக்குநர் தேவை**

விசுவமடுப் பகுதியில் பணியாற்ற ஒப்புநோக்குநர் தேவை.க.பொ.த. சாதாரண/உயர்தரத் தேர்வில் தமிழ் மொழியில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றோர் விண்ணப்பிக்கலாம். உங்கள்தகைமைகளை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஈழநாதம் வி.இ 5799,யாழ்சாலை கிளிநொச்சி. (5799)

**காணி விற்பனைக்குண்டு**

இல 135, ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள 01 ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- ஆ.நடராசன் (JP) இல. 166, ஜெயந்திநகர். விலை பேசித்தீர்க்கப்படும். (5854)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
10 □ 02 □ 1966

காலனின் அடியில்
13 □ 02 □ 2005

### அமரர் நடராசா பாஸ்கரன்

அன்புதனை அருவியாக்கி பண்புதனை சிகரமாக்கி
பார்போற்ற வாழ்ந்த பாசமிகு கரனே
மாதம் ஒன்று சென்றிடினும் மறந்திடுமோ நின்
திருமுகம் இனசனத்தை ஈர்ப்பதில் ஒளி விளக்கே
உன்னை மண்ணில் வாழ விடாமல் இடைமறித்தான்
(காலனவன்)
தாங்கொணாத் துயரத்தில் தத்தளிக்கும் எங்களுக்கு
உன் நினைவுகளே போதுமடா
எம் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோட
நீ கடவுளடி சேர்ந்து விட்டாயடா
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பாதமலர்
பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன்பிரிவால் துயருறும்,
அப்பா அம்மா,
சகோதரங்கள்.

(5855)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் மைந்தனாய்
23-05-1977

தாயக மண்ணின் மாவீரனாய்
15-03-1999



கப்டன் கீதன்
தனபாலசிங்கம் மதியரசன்
கரவெட்டி, யாழ்.

வருடங்கள் ஆறு ஆனபோதும்
ஆறாமல் உள்ளதையா உம்நினைவு
விதி இது என்றெண்ணி ஆறிவிட முடியவில்லை
வீர வேங்கையாய் நீ விடுதலைப் பயணத்தில்
விரைந்த அழகு இன்னும் எம் கண்களுக்குள்

தமிழ் ஈழமதில் வாழ்ந்திடும் தமிழினத்தின்
தன் மானம் காத்திடும் நிலைவேண்டி
தானைத் தலைவனின் படையினிலே
வரிப் புலியென நீ புகுந்தாய்

புலிப்படையதினில் நீ இணைந்து
கீதன் எனும் நாமம் கொண்டு
விடுதலைக்கு நீ ஆற்றிய பணிக்கு
வித்திட்டு வீழ்ந்தது சும்மாயல்ல
மாவீரனாய்

தரணியிலே தமிழினம் உள்ளவரை
மாறாது உம் நினைவு
மறையாது உம் பணி
மாவீரனே கீதா!

15-03-2005 இன்று கப்டன் கீதனின் நினைவு மலர்ந்த நாளில் எமது இல்லத்தில் நிகழும் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

த.முகவரி:
சந்தியம்மன் கோவிலடி,
3ஆம் வட்டாரம்,
முள்ளிவளை.

தகவல்:
இ.தனபாலசிங்கம்,
குடும்பத்தினர்.

(5805)

# குடாநாட்டில் படையினருக்கு எதிராக நேற்று நடந்த பேரணி...




(படப்பிடிப்பு:- தயாபரன், ஆன்சிலின், சுஜீவன், 41)

# மருத்துவ பீட மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் இறுதியாண்டு சத்திர சிகிச்சை கற்கை நெறியை ஆரம்பிக்க கோரி மருத்துவபீட மாணவர்கள் நேற்று ஆர்ப் பாட்டப் பேரணி நடத்தினர்.**

காலை 9.30 மணியளவில் மருத்துவபீடத் தின் நுழைவாயிலில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி திருநெல்வேலி சந்தியை சென்றடைந்து அங்கிருந்து பலாலி வீதிவழியாக பரமேஸ் வராச் சந்தியை சென்றடைந்தது.

சேர்ந்த பலநூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு உரத்த குரலில் கோசங் களை எழுப்பினர்.

சத்திரசிகிச்சை இல்லாதது மருத்து வக்கல்வியா? 'வாக்குறுதிகள் காற்றிலா?,




(41)

அங்கிருந்து யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கு பிரதான நுழைவாயிலின் ஊடாக வந்த பேரணியினர் துணைவேந்தர் அலுவலகம் முன்பாக ஒன்று கூடினர்.

இப்பேரணியில் மருத்துவ பீடத்தைச்

தேவை இல்லை உறுதிமொழி, எங்களுடைய கல்வி நிலை பற்றி சிந்திக்க ஒருவரும் இல்லையா? போன்ற கோசங்கள் இப்பேரணி யில்எழுப்பப்பட்டன.

மாணவர்கள் உள்ளடங்கிய ஒரு குழுவினர் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சென்று மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அதனைத் தொடர்ந்து சனாதி பதி சந்திரிகாவிற்கான மகஜரை யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தனர்.

(36,41,33,28,27)

## உதவிப் பொருட்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

சுனாமி அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து சாவகச்சேரி கோவில் குடியிருப்புக் கிராமத்தில் தங்கியிருக்கும் 26 குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவினரால் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனேயே இவை வழங்கப்பட்டுள்ளன. (33)

## வேகத்தடுப்பு அரண்களை உடனடியாக அகற்றுக

யாழ்.காரைநகர் மேற்கு வீதியில் சிறிலங்கா கடற்படையினரால் இடப்பட்டிருக்கும் வேகத்தடுப்பு அரண்கள் உடனடியாக அகற்றப்படல் வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.மேற்படி வீதியிலுள்ள கடற்படை முகாமின் பாதுகாப்பிற்காக வீதியில் கடற்படையினரால் நிறுவப்பட்டிருக்கும் வேகத்தடுப்பு அரண்களின் விஸ்தீரணத்தால் அப்பகுதியில் அடிக்கடி வீதி விபத்துக்கள் நிகழ்ந்து வருகின்றமையைச் சுட்டிக்காட்டியே இப்பகுதி மக்கள் காரைநகர் பிரதேச செயலாளரிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். (33)

## வெப்பநோய்கள் தீவிரமாகப் பரவுகின்றன!

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது நிலவி வரும் கடும் வெப்பமான காலநிலையையடுத்து தீவகப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு வெப்பக்காய்ச்சல் மற்றும், கண்நோய், சிரங்கு, வாந்திபேதி போன்ற நோய்கள் பரவத்தொடங்கியுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இந்நோய்களின் தாக்கம் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, வேலணை போன்ற பகுதிகளில் அதிகம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதி மக்கள் நோய்ப்பரம்பல்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறும், அன்றாட உணவில் பழவகை மற்றும் கீரைவகைகள், மரக்கறிகள் என்பவற்றைச் சேர்த்துக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளனர். (33)

## சிங்களப் படைகளை அகற்றி சமாதானத்திற்கு ஒத்துழைக்குக

(நீர்வேலி)

மக்கள் மத்தியில் நிலை கொண்டுள்ள சிங்களப்படைகளை அகற்றி இங்கு நிரந்தர சமாதானம் ஏற்பட ஒத்துழைக்க வேண்டுமென வலி.கிழக்கு கிராம அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டத் தலைவரிடம் நேற்று ஒன்றியம் சமர்ப்பித்த மகஜரிலேயே இந்த வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற வயோதிபப் பெண்மீதான சிறிலங்கா சிப்பாயின் பாலியல் வன்முறை சிறிலங்காப் படைத்தரப்பினர் மத்தியில் ஊடுபரவி இருக்கும் பாலியல் வக்கிர உணர்வின் வெளிப்பாடாகும்.

இவ்வகையிலேயே சிறிலங்காப் பேரினவாத அரசும் தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பைத் திணிக்கின்றது. ஆக்கி ரமிப்பின் ஒரு வடிவமாகவே தமிழ்ப்பெண்கள் மீதான வன்முறையைக் கருதுகிறோம்.

மூன்று வருடங்களாக போர் நிறுத்த உடன்படிக்கை அமுலிலிருந்தும் நிரந்தர சமாதானத்திற்கான முனைப்புக்களை சிறிலங்கா அரசாங்கம் அரித்துக்கொண்டு வருவது தெளிவாகத் தெரிகிறது.

எனவே தான் சிறிலங்கா படைத்தரப் பினரை அவர்கள் தற்போது நிலை கொண்டுள்ள காவலரண்கள், முகாம்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறுமாறு கோருகிறோம். இவையே சிறிலங்காப் படைகளின் தமிழ் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு தளமாக விளங்கு கின்றன.

ஆனால் சிறிலங்கா பேரினவாத அரசாங்கமோ கபடத்தனமான வகையில் இடையூறு விளைவிக்கும் வகையில் வஞ்சக நாடகமாடுகிறது. ஆனால் இது வெற்றிபெறப் போவதில்லை எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41,33)

## கூலிக்கு மாரடிக்கும் படையை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குக

குடிமனைகளில் நிலைகொண்டுள்ள கூலிக்கு மாரடிக்கும் சிங்களப் படையை உடனடியாக வெளியேற்ற மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நீர்வேலி விவசாய சம்மேளனம் வேண்டு கோள் விடுத்துள்ளது. நீர்வேலியில் கடந்த வியாழக்கிழமை வயோதிபமாது மீது சிறிலங்கா படைச் சிப்பாய் மேற்கொண்ட பாலியல் வல்லுறவு முயற்சி குறித்து சம்மேளனம் நேற்று ஆணைக்குழுவிடம் கையளித்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது. ஈழத்தமிழ் மக்களாகிய நாம் காலங் காலமாக சிங்கள இராணுவத்தால் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்தி ருக்கிறோம். பெண்கள் மீதான வன்முறைகளில் ஈடுபடும் இராணுவம் அவர்கள் மீது பாலியல் பலாத்காரம் போன்ற அருவருக்கத்தக்க செயல் களிலும் ஈடுபடப் பின்னிற் பதில்லை.என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(28)

# க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியாகும்

## -யூலை- ஆறாம் திகதி உயர்தரப்பரீட்சை ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சை பெறுபேறுகளை இம்மாத இறுதியில் வெளியிட முடியுமென சிறிலங்காவின் பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான நட வடிக்கைகளும் இடம்பெறுவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர். எவ்வாறாயினும் பொலநறுவை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ள நிலைமை காரணமாக சில மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய தில் அசௌகரியங்களை எதிர் நோக்கினர். இந்த மாணவர்களுக் கென விசேட பரீட்சை ஒன்றை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்த போதிலும் இதற்கென மாணவர்களிடம் இருந்து விண் ணப்பங்கள் கிடைக்கவில்லை யெனவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை ஏனைய மாண வர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது எவ்வித தாமதங்க ளையும் ஏற்படுத்தாது எனவும் தெரிவித்தார். இதேவேளை கல்விப் பொதுத் தாரதர உயர்தரப் பரீட்சை யூலை மாதம் ஆறாம் திகதி ஆரம் பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் அவர் கூறினார்.

ஏப்பிரல் மாதம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த உயர்தரப் பரீட்சைகள் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கருத்திற்கொண்டு யூலை மாதம்வரை ஒத்திவைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கதாகும்.



மட்டக்களப்பில் தென்னிந்தியச் திருச்சபை முதன்மைக்குருவான எஸ்.ஜெயநேசன் அடிகளார் 250 பேருக்கு தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான மேசன் மற்றும் தச்சு உபகரணங்களை அண்மையில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை முற்றாகத் தடை!

(முல்லை)

சுனாமிக்கு பிற்பாடு முல்லைத் தீவு மாவட்டத்தில் கடற்றொழில் உபகரணங்களை விற்பனை செய்வது முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்கச் சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.

குறிப்பாக படகு வெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள், விற் பனை செய்வது தடை செய்யப் பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத் தினால் விற்பனை செய்வதானால் க.தொ.கூ சங்க சமாசத்தின் அனு மதி பெற்ற பின்பே விற்பனை செய்ய வேண்டும் என்பதனையும் மீனவர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

# இரவுவேளையில் வீதி விதிமுறைகளை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை

(வட்டக்கச்சி)

கிளி நொச்சி வீதிப்போக்குவரத்துப் பிரிவினரால் வட்டக்கச்சிப்பகுதியில் இரவுநேர வீதிரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந் நடவடிக்கையின் போது மதுபோதை யில் வாகனம் செலுத்தியோர், வேகக்கட்டுப்பாட்டை மீறி வாகனம் செலுத்துவோர், வாகன ஒளியைக் குறைக்காமல் வாகனம் செலுத்து வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் இரவு மது போதையில் வாகனம் செலுத்திய ஐந்துக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக ளுக்கு உள்ளாக்கப்பட்டு தண்டப் பணமும் அறவிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# இருபது குடும்பங்கள் கடந்த வாரம் தலைமன்னாரில் மீள் குடியமர்வு

(மன்னார்)

பேசாலை அகதிமுகாமில் வசித்த வட்டக்கண்டல், பெரிய நாவற்குளம், பள்ளமடு ஆகிய இடங்களைச்சேர்ந்த 20 குடும்பங்கள் கடந்த வாரம் தலைமன்னார் பகுதியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள வீட்டுத்திட்டத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டன.

இவர்களுக்கு இலவசமாக 10 பரப்புக் காணியும், 14500 ரூபாய் பெறு மதியான தற்காலிகக் கொட்டகை களும் 25000 ரூபாய் மீளக்குடியமர்வு கொடுப்பனவும் வழங்கப்பட்டன. இதேவேளையில் இவர்களுக்குத் தொடர்ந்தும் 12 மாத காலத்துக்கு இலவச உலர்உணவுப்பொருட்களும் மற்றும் யு.என்.எச்.சி. ஆர் நிறுவனத் தினால் உலர் உணவு அற்ற பொருட்களும் வழங்கப்பட்டன. (18)

## கண்டெடுப்பு

கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர்ந்த ஐங்கரன் என்பவரின் உழவு இயந்திரம் மற்றும் உழவு இயந்திரப் பெட்டி என்பவற்றிற்கான 2005ஆம் ஆண்டு அனுமதி ஆவண நகல் பிரதி கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (12)

# பூநகரி பிரதேச பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

## பாவனை குறித்த செயலமர்வும் இடம்பெற்றது

(பூநகரி)

**பூநகரி பிரதேச பாடசாலைகளுக்கு ஜப்பான் கற்றல் உபகரணங்கள் சிலவற்றை வழங்கியுள்ளது. இதற்கான கையளிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.**

ஜப்பான் தேசிய கூட்டுறவு நிறு வனத்தால் தரமான கரும்பலகைகள், வெண்கட்டிகள் போன்ற கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் வைபவமும் பாவனை பற்றி ஆசிரியர் களிற்கான செயல மர்வும் கடந்த 12 ஆம் திகதி காலை வலயக் கல்விப் பணிப்பாளர் குரு குலராசா தலைமையில் பூநகரி ம.வித்தியால யத்தில் இடம்பெற்றது. இந்நிகழ் விற்கு முதன்மை விருந்தினராக இலங்கைக்கான ஜப்பான் தேசியக் கூட்டுறவு நிறுவனவதிவிடப் பிரதிநிதி பேராசிரியர் சகாட்ட கலந்து கொண்டார். அவருடன் ஜப்பான் தேசிய கூட்டுறவு நிறுவனப் பிரதிநிதி நிசிமாறி, வட கிழக்கு மாகாணக் கல்வித திணைக்களத்தின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. வேதநாயகம் மகரகம தேசிய கல்வி நிறுவன உதவிச் செயலர், திட்ட அதிகாரி தே.முகுந்தன் வலயக் கல்விப் பணி மனைக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பி.மார்க் கண்டு ஆகியோரும் கலந்து கொண் டனர். இந் நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளரால் பாடசாலைத் தேவைகள் பற்றி ஓர் மகஜரும் கையளிக்கப் பட்டது. பூ.ம.வி அதிபர் பொன். தில்லைநாதன், பூநகரி பாடசாலைகளில் குடிநீர்ப் பிரச்சினை தொடர் பாக அவர்களின் கவனத் திற்கு கொண்டு வந்தார்.

மாணவத் தலைவன் ம.கோகி லனின் உரையும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பூநகரிக் கோட்டத்தைச் சேர்ந்த முட்கொம்பன் அதக பாடசாலை, சாமிப் புலம் அதக பாடசாலை, செல்லையாதீவு அ.த.க பாடசாலை, கறுக்காய்த்தீவு ம.வி, ஞானி மடம் அதக.பாடசாலை, பரமன் கிராய் அ.த.க.பாடசாலை, கௌதாரி முனை அ.த.க.பாடசாலை, வினாசி யோடை அ.த.க. பாடசாலை, தம்பிராய் அ.த.க. பாடசாலை, சுண்ணாவில் அ.த.க. பாடசாலை சிறிவிக்கி னேஸ்வரா அதக.பாடசாலை , செம்பன் குன்று அ.த.க.பாடசாலை , ஜெயபுரம் அ.த.க.பாடசாலை , பல்லவராயன் கட்டு அ.த.க.பாடசாலை , கரியாலை நாகபடுவான் இல-3 அ.த.க. பாட சாலை, கரியாலை நாகபடுவான், இல-2 அ.த.க.பாடசாலை, குமுழ முனை அ.த.க. பாடசாலை, நாச்சிக் குடா மு.த.க. பாடசாலை, கிராஞ்சி அ.த.க பாடசாலை, வலைப்பாடு றோ.க பொன்னாவெளி சைவப் பிரகாச வித்தியசாலை, இரணைதீவு றோ.க, பூநகரி ம.வி, மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை ஆகிய 24 பாடசாலைகளிற்கு தலா ஐந்து வீதம் கரும்பலகைகள் வழங்கப்பட்டன. இறுதியாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி. கணபதிப்பிள்ளை நன்றியுரை வழங்கினார். (34)

# கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி வள நிலையம் ஆரம்பிப்பு

(மல்லாவி)

கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி வள நிலைய ஆரம்பவிழா நிகழ்வு கடந்த 10ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மகாவித்தியாலய மண்ட பத்தில் இடம் பெற்றது.

செயற்திட்ட கண்காணிப்பு மீளாய்வு உத்தியோகத்தர் இ.பிர கலாதன் இந் நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

கல்விவள நிலைய பெயர்ப் பலகையினை வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பரந்தாமன் திரைநீக்கம் செய்துவைத்தார். கல்வி வள நிலைய மண்டபத்தை கன கராயன் குள மகாவித்தியாலய உப முதல்வர் திருமதி, ம.சிவானந்தன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கல்வி வளத் திட்டத்தின் கீழ் நூற்றிக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்டு கல்வியினை ஆரம் பித்தனர். (24)

# பாதிப்புற்ற மக்களுக்கான செயற்பாடுகள் குறித்து ஆராய்வு

(முல்லை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை மீளக் கட்டி யெழுப்புவதற்கான குழுவினருக்கும், அரச சார்பற்ற நிறுவனத்தின் முல்லை மாவட்ட பிரதிநிதிகளுக் குமிடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதியாக கலாநிதி முத்துகிருஷ்ணன், சர்வானந்தன் மற்றும் நிகொட் திட்டப் பொறியியலாளர் த.ஜெயவீரசிங்கம் சாவகச்சேரி பிரதித்திட்டப் பணிப்பாளர் த.ஜெயவீரசிங்கம், பணிப்பாளர் திருமதி, ம.வில்வராசா கச்சேரி ஆலோசனைப் பொறியியலாளர்க ளான த.ஜெயக்குமார், ஜெயரஞ்சன், கரைதுறைப்பற்று விசேட ஆணை யாளர் கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். (20)

# வாகனப் பாதுகாப்புப் பகுதியைச் சீராக்குக!

மல்லாவி பொதுச்சந்தைப் பகுதியில் அமைந்த ஈருருளிகள், உந்துருளிகள் பாதுகாப்பாக விடப்படும் கொட்டகை சீரழிந்துள்ளமையால் பொதுச்சந்தைக்கு



பொருட்களை வாங்க வருவோர் பல அசௌகரியங்க ளுக்கு உள்ளாகின்றனர்.

மேற்படி பொதுச்சந்தைப் பகுதியில் நீண்ட காலமாக நுகர்வுப் பொருட்களை வாங்க வருவோர்கள் தங்கள் ஈருருளி, உந்துருளிகளை பாதுகாப்புக்காக இக் கொட்ட கையில் விட்டும் அதற்கான பணத்தையும் செலுத்தி வருகின்றனர். சீரழிந்துள்ள இக் கொட்டகையின் கீழ் விடுவதால் மழை காலத்திலும், வெயில் காலத்திலும் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் இருந்து வருகின்றன. அத்துடன் இக் கொட்டகையின் பிரதான வாசல் பகுதியில் மரக்கறி கொள்வனவுகள் என்பன காலையில் தினம் நடைபெற்று வருவதால் மேற்படி ஈருருளிகள் உந்துருளிகளைப் பாதுகாப்பாக விடமுடியாத நிலை ஏற்பட்டும் வருகின்றது. இது சம்பந்தமாக நுகர் பொருட் களை வாங்க வருவோர்கள், வியாபாரிகள் எனப்பலரும் விசனம் தெரிவிப்பதோடு, இக் கொட்டகையைச் சம்பந்தப் பட்டவர்கள் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென மக்கள் கேட்கின்றனர். (24)

# தமிழீழ வைப்பகப் பிரதிநிதிகள் வர்த்தகர்கள் சந்திப்பு

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களைத் தமிழீழ வைப்பகப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பு கடந்தவாரம் இடம்பெற்றது. கடன் எடுத்த வர்த்தகர்களுக்கு மேலும் சலுகை கள் வழங்குவது தொடர்பாகவும், மேலும் வர்த்தக நடவடிக்கை களுக்கு கடன் வழங்குவது தொடர்பாகவும்,கடன் மீளளிப்புக்கள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. (20)

# பிரார்த்தனைக் கூட்டத்தில் புகுந்தவர் துப்பாக்கியால் சுட்டு ஏழு பேர் பலி

(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் ஒரு விடுதியில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் துப்பாக்கியால் சுட்டத்தில் ஏழுபேர் பலியாகியுள்ளனர்.**

அமெரிக்காவில் விஸ்கான்சின் மாநிலத்தில் புருக் பீல்டு நகரிலுள்ள ஒரு விடுதியில் "லிவிங் சர்ச் ஆப் காட்" என்ற சபையின் சார்பில் பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டம் நடந்து கொண்டு இருக்கும் போது, 45 வயதுள்ள ஒருவர் வந்தார். உடனே அவர் துப்பாக்கியால் சுடத்தொடங்கினார்.

இதில் இரண்டு சிறுவர்கள் உட்பட நான்கு பேர் அந்த இடத்தி லேயே குண்டு பாய்ந்து இறந்தனர். ஏழு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர். அதில மூன்று பேர் மரணமானார்கள். காயமடைந்தவர் களில் 10 வயதுச்சிறுமியும் ஒருவர்

அந்தக் கொலைக்காரரும் அந்த இடத்திலே தன்னைத்தானே சுட்டுத்தற்கொலை செய்துகொண்டார். எதற்காக அவர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார் என்பது தெரியவில்லை. இது பற்றி பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்தச் சபை கடந்த ஐந்து ஆண்டுகளாக இதே விடுதியில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்திவருகிறது.



தனது பணியாளர் ஒருவரை சித்திரவதை செய்த குற்றச் சாட்டில் வர்த்தகர் ஒருவர் மலேசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகிறார்.

# ஈரான் அணு உலைகளை தாக்கியழிக்க இஸ்ரேல் திட்டம்

(லண்டன்)

ஈரானின் அணு உலைகளைத் தாக்கி அழிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக லண்டன் சண்டேரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரான் அணுவாயுதம் தயாரிப்பதை கைவிடுவதற்காக ஐரோப்பிய நாடுகள் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. இந்தப்பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் ஈரானின் அணு உலைகள் மீது விமானத்தாக்குதல் நடத்திஅவற்றை அழிக்க இஸ் ரேல் திட்டமிட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் ஷரோனும், அவரது மந்திரி சபையும், ஈரான்மீது தாக்குதல் நடத்த அனுமதி அளித்துள்ளன.

இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் நாங்கள் தடையாக இருக்கமாட்டோம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனா. இஸ்ரேலின் அதிரடிப்படையும், விமானப் படையும் ஒரு சேரசேர்ந்து இந்தத் தாக்குதலை நடத்துமென அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# ஈராக்கில் கார்க்குண்டுத்தாக்கு இரண்டு அமெரிக்கர்கள் பலி

(பாக்தாத்)

ஈராக்கிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்குப் பாதுகாப்பு வழங்கும் இருவர் நேற்று நடந்த கார்க்குண்டுத்தாக்குதலில் பலியாகியுள்ளனர். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பிளாக்வாட்டர் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தார்கள்.

வேலை முடிந்ததும் பாக்தாத் மற்றும் ஹிலா நகருக்கு இடையே இவர்கள் நடந்து சென்று கொண்டு இருந்தார்கள்.அப்போதுஅந்த இடத்தில் நடந்த கார் வெடி குண்டுத்தாக்குதலிலேயே இவர்கள் பலியாகினர்.



ஜோர்ஜியாவில் அமெரிக்க குடிவரவு, சுங்கத் திணைக்கள அதிகாரியான டேவிட் வில்லியம் கொலை செய்யப்பட்ட வீட்டை காவல் காக்கும் அட்லாண்டா புலனாய்வு அதிகாரி.

# காதலர்களுக்கு மரண தண்டனை

(ரியாத்)

சவுதிஅரேபியாவில் ஓரினக்காதலர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.அகமது அல்னெசியும், ஷாகிர் அல்ரப்ளியும் , ஓரினக்காதலர்கள். அவர்களின் இந்த உறவு மாலிக்கான் என்ற பாகிஸ்தான்காரருக்குத் தெரிய வந்தது. அவர் வெளியே தெரி வித்து விடுவாரோ என்று பயந்து அவர்கள், அவரைக் கல்லால் அடித்துக் கொன்றனர். பின்னர் அவரது உடலுக்குத் தீவைத்து எரித்தனர். இச் சம்பவம் குறித்து பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.சவுதியரேபியாவில் ஓரினச் சேர்க்கை தடை செய்யப்பட்ட ஒன்று ஆகும். இந்தக் குற்றத்தை செய்ததோடு, கொலையையும் செய்த அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பொது மக்கள் முன்னிலையில் அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.


# சீன ராணுவத் தலைவராக ஹியூ-ஜிண்டாவோ தேர்வு

(பீஜிங்)

சீனாவின் சக்தி வாய்ந்த ராணுவத்தின் தலைமைப் பதவிக்கு நடந்த தேர்தலில் சனாதிபதி ஹியூ-ஜிண்டாவோ வெற்றி பெற்றார். இரண்டாயிரத்து 886 உறுப்பினர்கள் ஜிண்டாவோவுக்கு ஆதரவாகவும் ஆறு பேர் அவருக்கு எதிராகவும் வாக்களித்தனர். ஐந்து பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. முன்னாள் சனாதிபதி ஜியாங் ஜமின்தான் இது வரை ராணுவத்தலைவராக இருந்தார். அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. ஜியாங்கைப் போலவே ஜிண்டாவோவுக்கும் ராணுவப் பின்னணி கிடையாது. ஜிண்டாவோ கம்யூனிஸ்ட்டு கட்சித் தலைவராகவும் இருப்பதால் கட்சி, ஆட்சி,ராணுவம் மூன்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதால் அவர் சக்தி வாய்ந்த தலைவராக உருவாகி இருப்பதாக அரசியல் நிபுணர்கள் கூறினர்.



பிலிப்பைன்சில் இஸ்லாமிய அடிப்படை வாதிகளுக்கும், பொலிசாருக்குமிடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் காயமடைந்த சகாவுக்கு உதவி செய்யும் பொலிசார்.



தென்கொரிய கடற்படையுடனான இணைந்த பயிற்சிக்காக தென்கொரியாவின் புசான் துறை முகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த அமெரிக்க கடற்படைக் கப்பலையும், படையினரையும் வரவேற்கும் தென்கொரியப் படையினர்.

## அந்தமானில் நிலநடுக்கம்

அந்தமான், நிக்கோபார் தீவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.அதிகாலை 3.43 மணிக்குச் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.6 எனப் பதிவாகியுள்ளது.

அந்தமான் -நிக்கோபார் தீவின் தெற்குக் கரையோரம் கிரேட் நிக்கோபார் அருகே இந்தநிலநடுக்கம் ஏற்பட்டது.

## ஈரானில் நில நடுக்கம்

(செக்ரான்)

ஈரானின் தென்பகுதியில் சிஸ்டான்-பலுச்சிஸ்தான் மாநிலத்தில் சரவண் நகர் அருகே நேற்றுக் காலையில் நில நடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் அது 5.9 ஆக இருந்தது. இதன் காரணமாக சில வீடுகளின் சுவர்கள் சேதமடைந்தன. ஜன்னல்கள் உடைந்தன. "இதில் உயிர்ச்சேதம் ஏதும் இல்லை" என்று சரவண்நகர கவர்னர் கூறினார்.

# பேய்க்குப் பயந்து வீட்டை காலி செய்தார் சனாதிபதி

பேய்க்குப் பயந்து மலாவி சனாதிபதி தனது வீட்டை காலிசெய்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்;

கடந்த டிசம்பர் மாதம் சனாதிபதி முதிரிகா, தலைநகர் லிலோங்வேயிலுள்ள பிரமாண்டமான சனாதிபதி மாளிகையில் குடியேறினார். 300 அறைகள் கொண்ட இந்த சனாதிபதி மாளிகை நவீன வசதிகளுடன் கட்டப்பட்டதாகும்.

வசதிகளுடன்அந்த மாளிகையில் வாழலாம் என்று நினைத்திருந்த சனாதிபதி முதிரிகாவைக் கடந்த சில தினங்களாக இரவில் கேட்கும் வினோத சத்தங்கள் பாடாய்ப்படுத்தி விட்டது. மாடிப் படிகளில் சிலர் ஏறுவதும், இறங்குவதும் போல நள்ளிரவில் கேட்கும் சத்தங்களால் சனாதிபதி முதிரிகா நிலைகுலைந்தார்.

சனாதிபதி மாளிகைக்குள் பேய்ப்பட்டாளம் புகுந்து விட்டதாகவும், நள்ளிரவில் அந்தப் பேய்கள் தன் அறையை சுற்றிச்சுற்றி வருவதாகவும் அவர் தினமும் பயந்தபடி கூறினார். கடந்த வாரம் ஒரு நாள் நள்ளிரவு தூங்கும் போது தன் உடல் முழுக்க எலி போன்ற பிராணிகள் சூழ்ந்து கொண்டு கடிப்பது போல அவருக்குத் தோன்றியது. விளக்கைப் போட்டுப் பார்த்த போது எதுவும் இல்லை. எனவே இது பேய்களின் வேலைதான் என்று நினைத்தார்.

இதையடுத்து அவர் சனாதிபதி மாளிகையை காலிசெய்து வெளியேறினார். தற்போது அவர் தலைநகரிலிருந்து 100 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வேறொரு பங்களாவில் தங்கியுள்ளார். சனாதிபதி மாளிகைக்கு மீண்டும் போக மாட்டேன் என்று கூறும் முதிரிகா அதை விற்று விட உத்தரவிட்டுள்ளார். அந்தப் பிரமாண்ட அரண்மனையை விலைக்கு வாங்க அமெரிக்க நடிகர் ஒருவர் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இதற்கிடையே பேய்களை விரட்டுவதற்காக அந்த அரண்மனையில் விசேட பூசைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

# பாக்.இராணுவம் அதிரடி!

அல்-ஹைய்தா தீவிரவாதிகளுக்கு எதிராக பாக்ராணுவத்தினர் அதிரடி வேட்டையில் மீண்டும் இறங்கியுள்ளனர்.

ஆப்கானிஸ்த்தானில் மறைந்திருந்த அல்-ஹைய்தா தீவிர வாதிகள், தலிபான் தீவிரவாதிகள் பலர் தற்போது, பாகிஸ்தானில் ஊடுருவியுள்ளனர். அமெரிக்காவுக்கு அளித்த உறுதிமொழிப்படி, தீவிரவாதிகளை ஒடுக்க பாகிஸதான் ராணுவம் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.இந்நிலையில் பாகிஸ்தான் மேற்குப்பகுதியில் அல்-ஹைய்தா தீவிரவாதிகள் பலர் மறைந்திருப்பதாக ரகசியத் தகவல்கள் கிடைத்ததையடுத்து. உடனடியாக, பாக்.ராணு வத்தினர் அந்தப் பகுதியில் தேடுதல் வேட்டையில் இறங்கினர். ஆப்கான் எல்லையை ஒட்டியதாகவுள்ள பாக்.மலைப்பகுதியில் நேற்று முன் தினம் ராணுவத்தினர் அதிரடித் தேடுதலில் ஈடுபட்டனர். வடக்கு வாசிரிஸ்தான பகுதியிலுள்ள மனாகிராமத்தில் ராணுவத்தினர் ஒவ்வொரு இடத்திலும் திடீர் திடீரென சோதனை நடத் தினர். இஸ்லாமாபாத்தில் இருந்து 300 கி.மீ தொலை விலுள்ள இந்தப் பகுதியை ராணுவத்தினர் தொடர்ந்து முற்றுகையிட்டுள்ளனர். என பாகிஸ்தான் படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கர்நாடகத்தில் ஆரம்பமாகும் ஜெயலலிதா மீதான வழக்கு!

தமிழகத்தில் இன்று பரபரப்பாகப் பேசப்படும் விடயம் ஒன்றே ஒன்று தான்! தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு மீண்டும் ஆரம்பமாக இருக்கின்றது; அதுவும் வேற்று மாநிலமான கர்நாடகாவில் அது தொடரப்பட இருப்பதுமே தமிழகத்தில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் விடயமாகவுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை ஆரம்பமாகி இருக்கும் நிலைமையானது தமிழக முதலமைச்சருக்கு இன்னோரன்ன நெருக்கடிகளை உருவாக்க பின் நிற்கமாட்டாது என்றே எதிர்வு கூறப்படுகின்றது.

இத்தகைய நிலைமையானது தமிழக எதிர்க்கட்சிகளுக்கு அமுதமாகவே இருக்கும். அதேவேளை ஆளும் அ.தி.மு.க அரசுக்கு விஷமாகவுமே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தலையாகி இருப்பது என்பது நடந்திருக்கக் கூடிய ஒன்றல்ல.

1993 தொடக்கம் 2003 வரை அதாவது 10 வருடங்களாக நிலுவையில் இருந்து வந்த டான்சி நிலப்பேர ஊழல் வழக்கானது, 2003 இல் முற்றாக மூடப்பட்டு தமிழக முதலமைச்சருக்கு விடுதலைய ளித்துவிட்டது.

இதேபோன்று தான் சொத்துக்குவிப்பு வழக்கும் சவ்வாக இழுபட்டு இறுதியில் ஒன்றுமே இல்லாத பூச்சியமாகிவிடும் என்றே எதிர்வு கூறப்பட்டது. அத்தகைய நிலைமை உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் 90% சாத்தியமாக இருந்தது எனலாம்.

ஆனால் எதிர்க்கட்சிகள் இந்த நிலைமையினை உருவாகவிடாது குறுக்கே விழுந்து தடுத்துவிட்டன. அந்தத்தடையின் பிரதி பலனே கர்நாடக மாநிலத்தில் சொத்துக்

ணையானது ஏதாவது விபரீதத்தை ஏற்படுத்துவதற்கு முன்பு மீண்டும் முதலமைச்சராகி விடவேண்டும் என்பதே அ.தி.மு.க வினது அறிவுரையாக இருந்தது.

அதை நிருபிப்பது போன்றுதான் தமிழக முதலமைச்சர் அவசரஅவசரமாக தனது நெருங்கிய அ.தி.மு.க.வினருடன் க ந்தாலோசித்ததாக தகவல்கள் கசிந்தன.

ஆனால் திடீரென்று சட்டசபை கலைப்பு எதுவும் இல்லை. 2006 இல் தான் தமிழக சட்டசபைத்தேர்தலை நடத்தவுள்ளதாக தமிழக முதலமைச்சர் பல்டி அடித்துவிட்டார்.

இதற்குப்பலவித காரணங்கள் கூறப்படுகின்றன. சட்டமன்றத்தேர்தலை அவசர அவசரமாக சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணைக்கு முன்பு நடத்திமுடிப்பதென்பது மிகவும் இயலாத காரியமாகும்.

எதிர்க்கட்சிகள் சொத்துக்குவிப்பு விசா

இவற்றுக்காகவே தான் 2005/ 2006 தமிழக வரவு செலவுத்திட்டத்தில் எல்லாமே மக்கள் சலுகை மயமாக இருப்பதாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

அதாவது சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை முடிவுகள் ஏதாவது சறுக்கலை ஏற்படுத்துமானால்.... மக்களின் அனுதாபம் ஏற்பட வழி கக் கூடியது அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மட்டுமே என்பது தமிழக முதலமைச்சரின் கணக்கின் விடையாக இருக்க முடியும் என்பதும் ஒருவகைக் கருத்தாகும்.

ஏற்கனவே சொத்துக்குவிப்பு வழக்கைத் துரிதகதியில் நடத்திமுடித்துவிட வேண்டும் என்பதில் கர்நாடக மாநிலம் தீர்க்கமாக இருக்கின்றது.

அதுமட்டுமன்றி கர்நாடக மாநிலத்துடன் தமிழக முதலமைச்சர் ஏற்கனவே பிணக்கினைத்தான் வளர்த்துக்கொண்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிலையில் சொத்துக்குவிப்பு விசாரணை ஆரம்பமாகவுள்ளதானது எத்தகைய நன்மை, தீமைகளைக் கொண்டு வரப்போகின்றது என்பதே பரபரப்பான விடயமாக இருக்கின்றது.

2006 சட்டமன்றத்தேர்தலுக்கு தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தயாராகிவிட்டன. சட்டமன்றத்தேர்தலுக்காகவேதான் இரண்டு நாள் மாநாட்டை தி.மு.க. திண்டுக் கல்லில் நடாத்தியுள்ளதாக அரசியல் நோக் கர்கள்

1996ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சிப்பீடமேறியதும், முதல் செய்த நடவடிக்கைகளில் தலையாயது தமிழக முதலமைச்சரது சொத்து விபரத்தைக் கண்ணில் எண்ணெய் ஊற்றி தேடியது தான்!

அதன் பலாபலனாகவே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவரது தோழி சசிகலா உள்ளிட்டோர் மீது சொத்துக்குவிப்பு வழக்குத் தொடரப்பட்டது.

1996 ஆம் ஆண்டு முதல் இந்த வழக்கானது நேற்றுவரை கிடப்பில்தான் தூங்கிக் கொண்டிருந்தது. வழக்குவிசாரணை நீண்டு சென்றதே தவிர முடிவுக்கு வந்தபாடில்லை.

அதனால் தான் சொத்துக்குவிப்பு முதல் டான்சி நிலப்பேர ஊழல் வரையான வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் போதே 2001 இல் மீண்டும் தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்றார்.

அதாவது தமிழகத்திலேயே விசாரணைகள் தொடரப்பட்ட நிலைமையானது தமிழக முதலமைச்சருக்கு மிகவும் சலுகையாகவே அமைந்ததே தவிர பாதகத்தை ஏற்படுத்தவில்லை.

ஏனெனில் தமிழக முதலமைச்சரின்




கட்டுப்பாட்டுக்குள் இருந்தமையினால், எத்தகைய நிலைமைகளையும் தனக்குச்சாதகமாக வளைக்க முதலமைச்சருக்கு பெரும் முயற்சி தேவைப்படவில்லை எனலாம்.

இல்லையேல் டான்சி நிலப்பேர ஊழல் வழக்கிலிருந்து தமிழக முதலமைச்சர் விடு

குவிப்புவழக்கு விசாரணை தொடங்கவுள்ளமையாகும்.

சொத்துக்குவிப்பு வழக்கு வேற்று மாநிலத்திற்கு மாற்றப்பட்டமையானது அகில உலகக் குற்றம் என்பது போலவே தான் தமிழக முதலமைச்சர் துள்ளிக் குதித்தார். உச்சநீதிமன்றத்தை நாடினார்.


ஆனால் உச்ச நீதிமன்றம் தமிழக முதலமைச்சருக்குக் கைகொடுத்து உதவவில்லை. மாறாக சொத்துக்குவிப்பு வழக்கு கர்நாடக மாநிலத்தில் நடத்தப்படுவதில் தவறெதுவும் இருக்கப்படமாட்டாது என்றே தீர்ப்பளித்து விட்டது.

அதாவது சொத்துக்குவிப்பு வழக்கானது கர்நாடகத்தில் நடத்தப்படுவதானது தனக்கு பாதகமாகவே அமையும் என்பதில் தமிழக முதலமைச்சர் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளார் போலுள்ளது. இல்லையேல் சொத்துக்குவிப்பு விசாரணை கர்நாடகத்தில் நடந்தால் என்ன..... தமிழகத்தில் நடந்தால் என்ன.... என்று ஏன் தமிழக முதலமைச்சர் மௌனம் சாதிக்காது, கர்நாடகம் என்றால் எட்டிக்காயாக நினைக்க வேண்டும்?

ஆக.... சொத்துக்குவிப்பு வழக்கு கர்நாடகத்தில் தொடரப்பட இருக்கும் நிலைமையானது தமிழக முதலமைச்சருக்கு ஜீரணிக்க முடியாதது என்பதை அவரது பலவித நடவடிக்கைகள் எடுத்துக் காட்டத் தவறவில்லை.

இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றுதான் சொத்துக்குவிப்பு வழக்குத் தொடரபபடுவதற்கு முன்னரே தமிழக சட்டசபையைக் கலைப்பது மீண்டும் தமிழக முதலமைச்சர் கதிரையைக் கைப்பற்றுவது என்பது போன்றே நிலைமைகள் அரங்கேற காத்திருந்தன எனலாம்.

ஏனெனில் சொத்துக்குவிப்பு விசார



ரணைக்கு முன்பு ஏன் சட்டசபைத்தேர்தல்..... என்று பிரச்சாரத்தைத் தொடங்கிவிடும் என்பதொரு வகைக் கருத்து.

அதேநேரம் தமிழக நிலமையானது தமிழக முதலமைச்சருக்குச் சாதமாக இருக்கவில்லை என்பதே பிரதானமானதொன்று. காஞ்சிமடம் முதல் விஜேந்திரர் வரையான கைது விவகாரம் தமிழகத்தைச்சர்ச்சை ஆக்கியுள்ள நில்லயில் சட்டசபைத்தேர்தல் நடத்தப்பட்டால் நிச்சயம் அதுவும் பாதகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாகவே இருந்துவிடும். அத்துடன் மக்கள் மனதில் நிறைவாக இடம்பிடிக்காமல் தேர்தல் நடத்துவதென்பது மிகவும் பாரதூரமான விளைவையே ஏற்படுத்தக்கூடியது.

இதேவேளை கடந்த பாரதிய ஜனதாக் கூட்டணியும் தமது ஆட்சிக்காலம் முடிவதற்கு முன்னரே தாமே வெற்றிவாகை சூடுவோம், ஆளுவோம் என்று பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை எதிர்கொண்டது. ஆனால் நிலைமை தலைகீழாகவே மாறிவிட்டதைத் தமிழக முதலமைச்சர் மறந்திருக்க முடியாது.

அதாவது ஆட்சிக்காலம் முடிவதற்குள் சட்டசபை கலைக்கப்படுவதும், தேர்தல் நடாத்தப்படுவதும் கூட தமக்குப்பாதகமாகவே அமையுமோ...... எனும் அச்சமாக இருக்க முடியும்.

இத்தகைய நிலையில் கர்நாடக மாநிலத்தில் சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை ஆரம்பமாக இருக்கின்றது. சட்டமன்றத் தேர்தல் காலமும் நெருங்கி வருகின்றது.

கருத்து வெளியிட்டுள்ளனர்.

2006 சட்டமன்றத்தேர்தலின் பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினே என்று மாநாட்டில் வலியுறுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சிகள் சட்டமன்றத்தேர்தலுக்குத் தயாராகி விட்டநிலையில் தமிழக ஆளும்

அ.கலைவாணி

அ.தி.மு.கவோ சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை் என்று கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும் மாறிமாறி அலையநேரிட்டுள்ளமையும் நேரடியாக அவதானிக்க முடியும்.

எனவே சொத்துக்குவிப்பு வழக்குவிசாரணை கர்நாடகத்தில் ஆரம்பமாகி இருப்பதானது நிச்சயம் ஆளும் கட்சிக்கு ஒரு பின்னடைவையே ஏற்படுத்தும் சாத்தியம் உண்டு என்றே கொள்ளலாம்.

ஆனால் தமிழக மக்களை சலுகை மழையில் நனையவிட்டிருக்கும் தமிழக முதலமைச்சர் அடுத்த சட்டமன்றத்தேர்தலில் கரைசேர்வாரா......?சொத்துக்குவிப்பு வழக்கு ஏற்படுத்தபோகும் விளைவு சாதகமா....? பாதகமா.....?என்பதே இன்றைய எதிர்பார்ப்பிற்குரிய வினாவாகும் என்பதில் சந்தேகமில்லை எனலாம்.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## இந்தியாவின் மெக்ராத்

கடந்த வருடம் மார்ச்சில் பாகிஸ்தான். மண்ணில் நடைபெற்ற பாகிஸ்தான் இந்திய அணிகளுக் கிடையிலான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் தொடர்களை இந்தியா கைப்பற்றிவர காரணமான வர்களுள் தமிழ் நாட்டின் பந்துவீச்சாளர் லக்ஸ்மிபதி பாலாஜியின் பங்களிப்பும் குறிப்பிடத் தக்கதாக அமைந்தது.

எனினும் அண்மையில்



வயிற்றில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டிகளில் பங்கேற்காது விட்டார்.

ஆயினும் தற்போது அணிக்கு திரும்பியதுமே குறிப்பிடத்தக்க வகையில் தனது திறனை வெளிப் படுத்தியுள்ளார்.

மொகாலி டெஸ்ட்டில் பாகிஸ்தானின் கமரன் அக்மல் தவறியிருந்தால் ஆட்ட நாயகன் விருது பாலா ஜியின் கைகளுக்கே சென்றடைந்திருக்கும,எனினும சற்று தாமதமாகியதால் பாலாஜிக்கு அது கைநழுவிப் போய்விட்டது.

இப்போட்டியில் பாலாஜியின் துல்லியமான பந்து வீச்சை யாரும் மறந்து விடமுடியாது. பந்து வீச்சாளர் ஒருவரினது நோக்கம் இலக்கை வீழ்த்துவதே அதனைச் சரியாக செய்தார் பாலாஜி குறிப்பாக முதல் இனிங்சில் எடுத்த ஐந்து விக்கெட்டுக்களில் பாகிஸ்தானின் கனேரியா இலக்கை மறைக்காதிருந்தால் ஐந்து இலக்குக ளையும் நேரடியாக வீழ்த்திய பெருமையை அவர் பெற்றிருப்பார். அத்துடன் அவ் இனிங்சில் அவரின் துடுப்பாட்ட வேகமும் பாராட்டத்தக்க வகையில் இருந்தமையானது 23 வயது இளம் வீரர் பாலாஜி சகலதுறை வீரராக வளர்ந்து விடுவார் என்பதில் ஐயமில்லை.

எனினும் அப்போட்டியில் அவர் கூடுதலாக முறையீடு செய்தமையால் ஊதியத்தில் 30 வீதம் அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் அபராதம் விதித்தவர் அவரின் நடத்தைதிறன் காரணமாக குறைவாகவே அபராதம் விதித்ததாகவும், அவரிடம் மன்னிப்புக் கோரியதாகவும் புதிய தகவல்கள் கூறுகின்றன.

## புதிய அவதாரம்





ஆசியா கண்டத்தில் கிரிக்கெட் போட் டிகளில் அல்லது மெய்வல்லுநர் போட்டி களில் மிளிரும் நட்சத்திர வீரர்களே இது வரை பிரபல்யம் அடைந்துள்ளனர்.

எனினும் அண்மைக்காலமாக இவற்றை முறியடிக்கும் வகையில் டென் னிஸ் போட்டிகளில் பிரபல்யம் பெற்று விளங்கும் வீராங்கனையாக சானியா மிர்சா திகழ்கின்றார். இவர் இந்தியாவின் ஐதராபாத் நகரில் பிறந்தார். அவர் அண்மைய ஒரு மாத காலமாக டென் னிஸ் களத்தைக் கலக்கி வருகிறார்.

அவர் ஆசிய நாட்டவர் என்ற வகையில் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் புகழ்பெற்று வருகிறார். காரணம் ஆசிய நாடொன்றில் இதுவரை இவ்வாறானதொரு வீரரோ, வீராங்கனையோ உருவாகவில்லை என்பதாகும். அத்துடன் அவர் மிகவும் இளம் வயது (18) வீராங்கனையு மாகும். காலிலிருந்து தலைவரை உடை யணியும் பாரம்பரியத்தைக் கொண்ட இனத்தில் பிறந்த இவர் டென்னிஸ் போட் டிகளின் போது அதற்கான உடைய ணிந்து காணப்படுகிறார். எனினும் சர்வதேச போட்டித்தொடரில் ஒன்றான கிறாண்ட்ஸ் லாம் தொடரில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறிய இந்தியப்பெண் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

அதுமட்டுமன்றி ஆரம்பத்தில் தரவரிசையில் 400 ஆவது இடத்திலிருந்த இவர் மிகவேகமாக முன்னேறி 99 ஆவது இடத்தைப் பிடித்து விட்டமை மேலும் ஒரு சிறப்பாகும்.

இருவருடப் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ள முஸ்லிம் இனத்தவரான இவர் போட்டிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தனது மரபு வழி உடையையே அணிகிறார்.

மிகவிரைவில் இவர் விளம்பர ஒப்பந்தங்களிலும் ஈடுபட இருப்பதாக அறியக்கிடைத்துள்ளது.

-வடிவேல்

## லக்கி செவன்

கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி தோல்விகள் இறுதிப்பந்து வரை நிர்ணயிக்கமுடியாது என்ற போதிலும் அதனை திசைமாற்றும் சந்தர்ப்பங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

அந்த வரிசையில் அண்மையில் நடைபெற்ற இருபோட்டிகள் ரசிகர்களின் கணிப்பை மாற்றியுள்ளது. முதலாவதாக மொகாலியில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் அணிகளிடை யேயான முதல் டெஸ்ட் போட்டி, இரண்டாவது நியூசிலாந்தின் கிரைச்சச்சில் நடைபெற்ற நியூசிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி.

மொகாலி டெஸ்ட் போட்டியில் நான்காம் ஆம் நாளில் வெற்றி இந்தியாவுக்கே என எதிர்பார்த்த வேளை ஏழாவது விக்கெட் இணைப்பாட்டம் அந்த எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்கி விட்டது. முதல் இனிங்சில் ஐந்து விக்கெட்டுக்களை சரித்த பாலாஜிக்கு இந்த இணையை பிரிக்க முடியாமல் போனமை ஏழின் அதிர்ஷ்டமாகும். எனினும் பாகிஸ்தான் தோல்வியிலிருந்து வெற்றி பெற்றது.

அடுத்ததாக ஞாயிறன்று முடிவடைந்த ஆஸி-நியூசிலாந்து அணிகளுடனான போட்டியிலும் நியூசிலாந்து வெற்றிக்கனியைப் பறிக்கும் என்றே கருதப்பட்டது. ஏனெனில் முதல் இனிங்சில் அது 433 ஓட்டங்களைப் பெற்றதும் அவ்ஸ்திரேலியா 201 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்து பரிதாபமான நிலையிலிருந்ததும் இதனை உணர்த்தியது. அங்கும் ஏழாவது இணையாக ஜோடி சேர்ந்த கட்டிச் கில்கிறிஸ்ட் இணைப்பாட்டம் கைகொடுத்தது. இறுதியில் வெற்றி அவுஸ்திரேலியா பக்கம் சென்றது.

அதேபோன்றே அண்மையில் முடிந்த தென்னாபிரிக்கா, சிம்பாப்வே அணிகளிடையேயான போட்டி யிலும் தென்னாபிரிக்காவின் ஏழாவது இணையான கலீஸ்-பிரின்ஸ் ஜோடி சிறப்பான இணைப்பாட்ட ஓட்ட மாக 184 ஓட்டங்களைப் பெற்றது.

இதனை நோக்கும் போது ஏழு அதிர் ஷ்டமான எண் தானோ?




## இவர்களும் மனிதர்களே

துடுப்பாட்ட வீரர்கள் சதமடிக்கலாம் ஆனால் கிரிக்கெட் நடுவர் ஒருவர் சதமடிக்கிறார் என்றால் சாதனை தானே. இந்த சாதனையை அரங்கேற்ற இருப்பவர் மேற்கிந்தியத்தீவின் ஸ்ரீவ் பக்னர்.

நாளை இந்திய பாகிஸ்தான் அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் கொல்கத்தாவில் ஆரம்பமாகிறது. இது நடுவர் பக்னர் பணியாற்றும் நூறாவது டெஸ்ட் போட்டியாக அமைகிறது.

சதத்தை எட்டும் உலகின் முதலாவது கிரிக்கெட் நடுவரான இவருக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) 'கோல்டன் பெயில்ஸ்' விருது வழங்கி கௌரவிக்கவுள்ளது.

58 வயதான பக்னரை பொறுத்தவரை கொஞ்சம் வித்தியாசமானவர். பந்துவீச்சாளர் ஆட்டமிழப்பு கேட்டு அலறும் போது அசராமல் நிற்பார். துடுப்பாட்ட வீரர் தப்பித்தோம் என நினைக்கின்றபோது கையை மெதுவாக உயர்த்தி அவுட் கொடுப்பார். இதைப்பார்க்கும் அத்தனை பேருக்கும் ஆத்திரம் எகிறும். ஆனால் எதையும் கண்டுகொள்ளாது அடுத்த பந்தை கவனிக்க தொடங்குவதுதான் பக்னரின் சிறப்பம்சம்.



ஜமேக்காவில் பிறந்த பக்னர் கால் பந்து நடுவராகவே தனது வாழ்க்கையை தொடங்கினார். 1988 இல் நடந்த உலக கோப்பை தகுதி கால்பந்து சுற்றுப் போட்டியில் எல்சல் வடோர். நெதர் லாந்து அணிகள் மோதின. இப் போட்டிக்கு பக்னரே மத்தி யஸ்தராக கடமை யாற்றினார். பின்னர் கால்பந்து நடுவரில் இருந்து கிரிக்கெட் நடுவரானார்.

1989 இல் கிங்ஸ்டனில் நடந்த இந்திய மேற்கிந்திய தீவுகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். நான்குமுறை உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் பங்காற்றியுள்ள பக்னர் ஒருநாள் போட்டியில் ஏற்கனவே சதமடித்துவிட்டார். இதுவரை 131 ஒரு நாள் போட்டிக்கு நடுவராக கடமையாற்றியுள்ளார்.

இதன் காரணமாக உலகக்கோப்பை கால்பந்து உலகக்கிண்ண கிரிக்கெட் போன்றவற்றிற்கு நடுவராக பணியாற்றியவர் என்ற பெருமையை பக்னர் பெறுகின்றார்.

தாமதமாக தீர்ப்பு வழங்கி சர்ச்சையில் மாட்டிக்கொள்வது குறித்து பக்னரிடம் கேட்டபோது, நானும் மனிதன் தானே. சில நேரங்களில் தவறு நடந்து விடுகின்றது. களத்தில் நடுவராக ஒரு சம்பவத்தைப் பார்ப்பதற்கும், தொலைக்காட்சியில் திரும்பப்பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசமுண்டு. தொழில்நுட்ப வசதியின் அடிப்படையில் நடுவர்களை விமர்சிப்பது சரியல்ல. தாமதமாக தீர்ப்புச் சொல்வதற்கும் ஒரு காரணம் உண்டு. குறிப்பிட்ட வீரர் ஒருவர் அடித்த பந்து குறித்து எனது மனதில் றிப்ளே செய்து பார்ப்பேன். பின்னர் முடிவை சொல்வேன். இதற்குச்சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. அவ்வளது தான் என தன்பக்க நியாயத்தை கூறுகின்றார்.

# நோர்வேயை சமாதான முயற்சிகளிலிருந்து வெளியேற்ற கதிர்காமர் ஊடாக ஜே.வி.பி முயற்சி

(கொழும்பு)

**சிறிலங்காஅரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளிலிருந்து நோர்வேத் தரப்பை வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஜே.வி.பியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ள வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. அண்மையில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவை சந்தித்த கதிர்காமர் மிக விரைவில் நோர்வே அரசாங்கத்தை சமாதான முயற்சிகளிலிருந்து விலக்கி வைப்பதாக உறுதியளித்துள்ளார். இதனை அடுத்தே இந்தியா சமாதான முயற்சிகளில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டுமென கதிர்காமர் இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நோர்வே ஏற்பாட்டாளர்கள் விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக செயற்பட்டு வருவதாகவும், தனிநாடு ஒன்றை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் ஜே.வி.பி தரப்பு அச்சமடைந்துள்ளது. எனவே நோர்வேத் தரப்பை சமாதான முயற்சிகளிலிருந்து விலக்கிவிட்டு விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள இந்தியாவை மத்தியஸ்தராக்குவதற்கு ஜே.வி.பி. விருப்பம் கொண்டுள்ளது. இந்தியா மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொண்டால் தனிநாட்டு கோரிக்கை அல்லது அதற்கு ஈடான தீர்வை பெற்றுக் கொடுக்காது என்று ஜே.வி.பி திடமான நம்பிக்கையினை கொண்டிருக்கிறது. இலங்கையில் தனிநாடு அல்லது அதற்கு ஈடான கட்டமைப்பு உருவாக்கப்படுவது இந்திய தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கும் என்பதோடு இந்தியாவிலுள்ள பிரிவினைவாத அமைப்புகளுக்குச் சார்பாக அமைந்து விடும் என்பதால் இந்தியா இலங்கையில் தனிநாடு உருவாவதை விரும்பாது என்று ஜே.வி.பியினர் கருதுகின்றனர். எனவே இந்தியா சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதை அவர்கள் வரவேற்பதாகவும், வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஊடாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனியார் துறையினருக்கும் வேதன உயர்வு சிறிலங்கா அமைச்சரவையில் தீர்மானம்

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களும் வேதன உயர்வைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா தொழில் அமைச்சர் அத்தாவுட செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்காக அமைச்சரவையில் விசேட அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் தனியார்துறை ஊழியர்களுக்கு 1000 ரூபா வேதன உயர்வை வழங்க வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## நிவாரணப் பொருட்கள் புதைக்கப்பட்டமை தொடர்பாக இரு முரண்பட்ட தகவல்கள்

### விசாரணை பொலிசாரிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச செயலக காணிக்குள் புதைக்கப்பட்ட நிலையில் ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; குறிப்பிட்ட நிவாரணப்பொருட்கள் தொடர்பாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ள தகவல்களுக்கும், பொதுமக்கள் தெரிவித்துள்ள தகவல்களுக்கு மிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இரு வாரங்களுக்கு முன்பு பாவனைக்கு உதவாத பொருட்கள் என பொது சுகாதார பரிசோதகர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட அரிசி, பால்மா, சீனி மற்றும் பருப்பு போன்ற பொருட்கள் ஓரிடத்தில் குழிவெட்டி புதைக்கப்பட்டதாக பிரதேச செயலாளர் எமக்குத் தகவல் தெரிவித்தார். ஆனால் பொது மக்களினால் வேறு ஒரு இடத்தில் நிவாரணப் பொருட்கள் புதைக்கப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அந்த பொதிக்குள் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படாத மருந்து போன்ற சில நிவாரணப் பொருட்களும் காணப்பட்டுள்ளன. இப்படி முரண்பாடுகள் இருப்பதால் இதனை பிரதேச செயலக அதிகாரிகள் புதைத்தார்களா? அல்லது வேறு யாரும் அங்கு கொண்டு வந்து புதைத்தார்களா? என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் இதுபற்றிய பொறுப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார்.

## ஆழிப்பேரலை நிவாரண உதவியாக இலங்கைக்கு 950 கோடி ரூபாய்

ஆழிப்பேரலை நிவாரண உதவியாக இதுவரை இலங்கைக்கு மத்திய வங்கி ஊடாக 950 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது. அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளுக்கும், ஏனையோருக்கும் மத்திய வங்கி ஊடாக இந்தத் தொகை வெளிநாடுகளிலிருந்து கிடைத்துள்ளது. இதில் அரசாங்க வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளுக்கு கிடைத்துள்ள 130 கோடி ரூபாவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## கிளி/கிளிநொச்சி ம.வி(கனிஷ்டா)

### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

**காலம்:–16.03.2005 புதன் மாலை3.00 மணி**

இந்த வித்தியாலயத்தில் கல்விகற்று வெளியேறிய அனைவருக்கும்! பல்வேறு பொறுப்புக்களிலும், பணிகளிலும் உள்ள தங்களுக்கு நேரத்தை ஒதுக்கி கொள்வதென்பது இயலாத காரியமேயாயினும் இந்த வித்தியாலயத்தின் எதிர்கால வளர்ச்சி பற்றி எல்லோரும் சேர்ந்து சில நிமிடங்கள் சிந்திப்போம். தவறாது வாருங்கள்.

அதிபர்,
கிளி/கிளிநொச்சி ம.வி

(சி.11557)


## உணவுப் பொருட்களால் ஆபத்து

வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் சில உணவுப் பொருட்களுக்குச் சூடான்-14 எனப்படும் சிவப்புநிற டை கலக்கப்படுவதாகவும் இங்கிலாந்து உட்பட்ட ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகவும் இவைகள் யாவும் பாவனையாளர்களுக்குச் சுகாதாரச் சீர்கேடுகளை உண்டுபண்ணுவதாகவும் இவைகள் விற்பனை செய்யும் நிலையங்களை உடனடியாகக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் துறைமுக உணவுப் பரிசீலனை பகுதிகளுக்கு அரசு அறிவித்துள்ளது. தற்பொழுது கொழும்பு மாநகர அதிகாரசபை இப்பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

## பௌத்த விகாரைகளைப் புனரமைக்க எந்தவொரு நாடும் உதவவில்லை

### -பௌத்தசாசன அமைச்சர் விரக்தி

சுனாமிப்பேரலைகளினால் முழுமையாக அழிவடைந்த 97 பௌத்த விகாரைகளைத் திருத்தம் செய்ய எந்தவொரு வெளிநாட்டரசாங்கமும் முன்வரவில்லை எனப் பௌத்த சாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

அழிவடைந்த விகாரைகளைப் புனரமைக்க பல வெளிநாடுகள் ஒப்புக் கொண்டிருந்தபோதும், இதுவரை எந்தவொரு நிவாரண உதவியும் கிட்டவில்லை எனவும் அவர் கூறினார்.

## 30, 000 அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமிப்பேரலைகளினால் அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு நடமாடும் சேவையின் அனுசரணையுடன் 30,000 அடையாள அட்டைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டம் 2282,காலி மாவட்டம்-5058,மாத்தறை மாவட்டம் 2025,அம்பாந்தோட்டை மாவட்டம்-3461,திருகோணமலை மாவட்டம்-3770, கிளிநொச்சி மாவட்டம் 7411,மட்டக்களப்பு மாவட்டம்-6221 மேலும் இந்நடமாடும் சேவைகள் நடைபெறுமென ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.




## தாடி மாஸ்ரர்

சோதிடர், தாடி மாஸ்ரர் இல 53, அண்ணாவீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. மத்திய கல்லூரிக்கு எதிராக வெளிநாட்டு ஜாதகம் எழுதவும், சோதிடம் சம்பந்தமான சகல விடயங்களையும் அறிந்து கொள்ளலாம். (வீடு,கிணறு)

(5789)



## 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 – 11 – 1938



மறைவு 08 – 03 – 2003

**வேலுப்பிள்ளை சின்னத்துரை**

திதி-15.03.2005

(முன்னாள் கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதவான்,சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளர்)

*உண்மையின் காவலனே...*
*நேர்மையின் உறைவிடமே...*
*ஈராண்டு கடந்திடினும்,எங்கள் இரத்த பாசம் அடங்கிடுமோ!*
*எங்கள் இதயமெல்லாம் ஏங்கித் துடிக்குதய்யா!*
*எம்மைத் தேற்றிட இருந்த ஒரேயொரு நபர் நீயென்றோ*
*காலத்தின் கோலத்தினால் காலன் அவன் கையில்...*
*நீயும் சிக்கியதனால் நாமும் துடிக்கின்றோம்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி,சாந்தி, சாந்தி*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
சகோதரர்கள்:- வே.தம்பையா,இ.பொன்னம்மா,க.பாக்கியம்,
மைத்துனி:-மகாலிங்கம் மனோன்மணி வாதரவத்தை,புத்தூர்.

தகவல்:–இ.தெய்வேந்திரம்,
வீதி அபிவிருத்தி திணைக்களம்,
முல்லைத்தீவு.

(5797)

# மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி

# கட்சிக் கொள்கையில் மாற்றமில்லை


## ~தி.மு.க மாநாட்டில் தலைவர் கருணாநிதி

(திண்டுக்கல்)

மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி எனும் எமது கட்சிக் கொள்கையில் எதுவித மாற்றமும் இல்லையென தி.மு.க தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மண்டல மாநாடு திண்டுக்கல் மாவட்டத்தில் இரண்டு நாட்களாக நடைபெற்று முடிந்துள்ளது. இம் மாநாட்டிற்கு தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அதிகமான தி.மு.க ஆதரவாளர்களும், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மாநாட்டின் இறுதியிலே தி.மு.க தலைவர் கருணாநிதி அவர்களின் நீண்டதொரு உரை இடம் பெற்றது. இதன்போதே மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்திலே சுயாட்சி என்று நாம் முன்னர் அறிவித்த கட்சிக் கொள்கையிலேயே எதுவித மாற்றமும் இல்லை. இன்றும் நாம் அதனையே வலியுறுத்தி வருகின்றோம் என்ற அவர் தொடர்ந்து பேசுகையில் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெறுவதற்கோ அதிக சுயாட்சித் தன்மையோடு விளங்குவதற்கோ ஏதாவதுதொரு தரப்பினர் முட்டுக் கட்டை போட்டால் அதை எதிர்த்துப் போராடவும் அதற்காக எத்தகைய தியாகங்களைச் செய்யவும் நாம் தயாரகவுள்ளோம். தற்போதைய நிலையில் தமிழ் நாட்டில் நிலவும் சர்வாதிகார ஆட்சியை அகற்றுவதற்கு நாம் கூட்டணிக் கட்சிகள் என்ற நிலைப்பாட்டுக்கு அப்பால் ஒரு அநியாயத்தை முடிவுக்குக் கொண்டு வர உழைக்க வேண்டும். இதற்காக நாம் அனைவரும் வெகு விரைவாக இன்றிலிருந்தே தேர்தல் பிரச்சாரப் பணிகளைத் தொடங்க வேண்டும். கட்சித் தொண்டர்கள் அனைவரும் ஊர் ஊராகச் சென்று தற்போதைய அநியாயத்தை எடுத்துக் கூறி இந்த ஆட்சியை அகற்ற மக்களைத் தயார்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இம் மாநாட்டிலே பா.ம.கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மற்றும் ம.தி. மு.க பொதுச்செயலாளர் வைகோ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவாகள் சொற்பொழிவாற்றியுள்ளனர்.



திண்டுக்கல்லில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டின் நிறைவு நாளில் தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன், கூட்டணித் தலைவர்கள் அமர்ந்திருப்பதையும், மாநாட்டுக்கு வந்திருந்த மக்கள் வெள்ளத்தையும் படங்களில் காணலாம்.

---

## நேர்முகத் தேர்வு

24.02.2005 திகதி ஈழநாதம் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் கணக்காளர், கணக்குப்பதிவாளர், கணக்காய்வாளர் பணிநிலை வேண்டுகைகளுக்கான நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும் 20.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் இடம் பெறும். விண்ணப்பித்தவர்கள் கல்விச் சான்றிதழ்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"நன்றி"
ஆளணி நிர்வாகம்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(சி.11565)

---

## மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
## வருடாந்த பொதுக் கூட்டம்-2005

**காலம்:-16-03-2005 புதன்கிழமை மாலை 10.30 மணி**

**இடம்:- பாடசாலை மண்டபம்**

பெற்றார், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது சமூகம் தரவும். இவ்வருடத்திற்கான சந்தாப்பணம் செலுத்தியோரே தெரிவுகளில் பங்கு கொள்ளலாம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க
செயற்குழு.

(5806)

---

## இலவச கணினிக் கற்கைநெறி

AssociationTHENDRAL(Franch) அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தினால் பின் வரும் கற்கைநெறி இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

### DIPLOMA IN MS OFFICE

எமது ஒன்றியத்தில் பயில்வதன் மூலம் கணினித் துறையில் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தின் சான்றிதழைப் பெற முடியும்.

தகைமைகள்:-

*க.பொதசாதாரணம் சித்தியடைந்திருக்க வேண்டும்.*

*வடமராட்சி கிழக்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருக்க வேண்டும்.*

*ஆகக் கூடிய வயது எல்லை 23.*

*மேற்படி தகைமையுடையவர்கள் எதிர்வரும் 20.03.2005 (ஞாயிறு) முற்பகல் 10.00 மணிக்கு யா.உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்கு மாறு வேண்டப்படுகின்றனர்.*

நிர்வாகம்,
பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்,
வடமராட்சிகிழக்கு.

(சி.11392)

---

## பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்

## கணினி கற்கைநெறி ஆரம்பம்

இம்மாத இறுதியில் புதுக்குடியிருப்பில் ஆரம்பமாகவிருக்கும் கணினி கற்கை நெறிக்கு (பெண்கள் மட்டும்) மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர். கற்கை நெறி இலவசம். தூர இட மாணவர்களுக்கு தங்குமிட ஒழுங்கு இலவசமாகச் செய்யப்படும். கற்கவிரும்பும் மாணவர்கள் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், யாழ்சாலை, கிளிநொச்சி,அல்லது பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், 9 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு என்னும் முகவரிகளுக்கு 25.03.2005 இற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

(5800) திட்டப்பணிப்பாளர்.

---

## அறிவித்தல்

### வவுனியா வடக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டாக்காலி நாய்களை அழித்தல்

எமது பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிகளுக்கு எதிரே சொல்லப்பட்ட இடங்களில் காணப்படும் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

| திகதி | | இடம் |
|---|---|---|
| 15.03.2005 | – | கனகராயன்குளம்,விஞ்ஞானகுளம்,மன்னகுளம். |
| 16.03.2005 | – | மதியமடு,சன்னாசி பரந்தன்,சின்னப்பூவரசங் குளம், அனந்தர் புளியங்குளம். |
| 17.03.2005 | – | சின்னடம்பன், பெரியமடு,நயினாமடு,கரப்புக்குத்தி |
| 21.03.2005 | – | குளவிசுட்டான்,மாறாவிலுப்பை,16ஆம் கட்டை. |
| 22.03.2005 | – | நெடுங்கேணி வடக்கு,நெடுங்கேணி தெற்கு,மாமடு. |
| 23.03.2005 | – | ஒலுமடு,மருதோடை,பட்டிக்குடியிருப்பு. |

எனவே மேற்படி உங்கள் வீட்டு வளர்ப்பு நாய்களைக்கட்டிவைத்து வளர்க்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் வீட்டு வளர்ப்பு நாய் வீதிக்கு வந்து எமது நடவடிக்கையின் போது இறக்க நேரிட்டால் அதற்கு வவுனியா வடக்குப் பிரதேசசபை பொறுப்பேற்க மாட்டாது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

க.ஞா. அகஸ்ரீன்
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை.

(சி.11561)

~ சிம்பாப்வேக்கு எதிரான செஞ்சூரியன் பார்க் டெஸ்ட் ~

# இன்னிங்ஸ் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா போட்டித் தொடரையும் கைப்பற்றியது



செஞ்சூரியனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்காவின் மண்டே சொண்டகியின் பந்து வீச்சுக் காரணமாக சிம்பாப்வே அணியை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 62 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வென்று தொடரைக் கைப்பற்றிவிட்டது.

கடந்த வெள்ளியன்று ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே தனது முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சைஆடிய தென்னாபிரிக்கா, அவ்வணியின் பிரின்ஸின் சதம்(139), போயே(83), கலிஸ்(58) ஆகியோர் பெற்ற அரைச்சதங்களுடன் ஏழு விக்கெட் இழப்பிற்கு 480 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த சிம்பாப்வே மூன்றாம் நாளான நேற்று சகல



விக்கெட்டுக்களையுமிழந்து 149 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. தென்னாபிரிக்கா தரப்பில் சொண்டகி இரு இன்னிங்சிலும் மொத்தமாக ஒன்பது விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியில் ஒன்பது விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சொண்டகி ஆட்டநாயகனாகவும், சகலதுறை வீரர் ஜக்கலிஸ் தொடரின்நாயகனாகவும் அறிவிக்கப் பட்டார்.

# எமது அணி திறமைகாட்ட நீண்டதூரம் செல்ல வேண்டும்




தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரை இழந்தபின் சிம்பாப்வே அணித் தலைவர் டடென்டா தைபு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த இரு போட்டிகளிலும் அடைந்த தோல்வி தமது அணி துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் திறமை காட்ட நீண்டதூரம் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். வீரர்கள் குறிப்பிடத்தக்க வகையில் போராடியபோதிலும் பெரும் ஓட்ட எண்ணிக்கையைப் பெறத் தவறிவிட்டனர் என்றும், பந்துவீச்சாளர்களைப் பொறுத்தவரை பாரிய தவறு ஏதும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.




சொண்டகி ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டமை மிகவும் சரியான விடயம் என்றும், அவர் அணிக்குத் திரும்பியமை மிக நன்று என்றார்.சொண்டகி 2003 ஆம் ஆண்டு இங்கிலாந்துடனான போட்டியில் அவர் வெறுங்கையுடன் சென்றார். அத்துடன் அவர் காயம் காரணமாக நீண்ட ஓய்வில் இருந்து தற்போது அணிக்குத் திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தா போட்டியில் வாய்ப்புக் கிடைத்தால் தூஸ்ரா முறையில் பந்து வீசுவேன்




தூஸ்ரா முறையில் பந்துவீச உள்ளதாக இந்தியக் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் கூறியுள்ளார்.இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொல்கத்தாவில் வரும் 16 ஆம்திகதி முதல் நடக்கவுள்ளது. மொகாலியில் நடந்த முதல் டெஸ்ட்டில் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் இடம்பிடிக்கவில்லை. இந்த நிலையில் கொல்கத்தா போட்டிக்கான இந்திய அணியில் ஹர்பஜன் சேர்க்கப்படுவார் என்ற பேச்சு எழுந்துள்ளது. இதற்கிடையே ஹர்பஜன் நிருபர்களிடம் கூறுகையில், கொல்கத்தாப் போட்டியில் ஆடும் வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் தூஸ்ரா முறையில் பந்து வீசுவேன். இது என்னுடைய வெற்றியின் ரகசியம். என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் இந்த முறைப்படி பந்துவீசி நிறைய விக்கெட்டுக்கள்சாய்த்துள்ளேன். இரண்டு ஓவருக்கு ஒரு முறை நிச்சயம் என்னிடம் இருந்து தூஸ்ரா பந்துவீச்சை எதிர்பார்க்கலாம்." என்றார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்திய அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் போட்டியில் ஆடியது. இந்தப் போட்டியின் போது ஹர்பஜன் தூஸ்ரா முறையில் பந்துவீசி சர்ச்சையில் சிக்கினார். அவரின் பந்து வீச்சை உன்னிப்பாகக் கவனிக்க சர்வதேச நடுவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் சுழல்பந்து வீச்சாளர்களுக்கு விதி தற்போது தளர்த்தப்பட்டுள்ளதால் ஹர்பஜன் எந்தப் பிரச்சினையிலும் சிக்கமாட்டார் என்று தெரிகிறது.

# கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கே வெற்றி வாய்ப்பு



"கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் " என்கிறார் பாகிஸ்தான் கிரிக்கெட் தலைவர் இன்சமாம் உல்ஹக். மொகாலிப் போட்டியை அபாரமாக சமன் செய்தது பாகிஸ்தான் அணி. இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் கொல்கத்தாவில் நாளை தொடங்குகிறது.இந்தப் போட்டி பற்றி பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் அளித்த பேட்டியில்,

மொகாலி டெஸ்ட் எங்களுக்குப் பல பாடங்கள் கற்றுக்கொடுத்திருக்கிறது. குறிப்பாக, களத்தடுப்பு விடயத்தில் பலபடி முன்னேற வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டோம். நழுவவிட்ட பிடிஎடுக்கும் வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தால், இந்தியாவுக்கு சவால் விடுத்திருக்க முடியும். கனேரியா அருமையாகப் பந்து வீசினார். ஆனாலும், மறுமுனையில் யாரும் அவருக்கு ஒத்துழைக்கவில்லை. இந்தப் போட்டி முடிவு, எங்கள் வீரர்களின் தன்னம்பிக்கையைப் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. தோல்வியின் விளிம்பில் இருந்து மீண்டு சமன் செய்ய முடிகிறது என்றால்,தவறுகளை மட்டும் திருத்திக் கொண்டால், இந்தியாவை ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கிறது. ஆனாலும்.கொல்கத்தா போட்டியில் இந்திய அணிக்கே வாய்ப்புக்கள் அதிகம் என்று நான் நம்புகிறேன். காரணம் அந்த அணியின துடுப்பாட்டவரிசை மிகப்பலமாக இருக்கிறது. இவ்வாறு தெரிவித்துள்ளார் இன்சமாம்.

# தோல்வியிலிருந்து மீண்டுவிட்டாலும் முடிவுக்காக நீண்டதூரம் செல்லவேண்டும்




மொகாலி டெஸ்ட் போட்டியில் தோல்வியிலிருந்து மீண்டுவிட்டாலும், தொடரின் முடிவை நோக்கி நீண்ட தூரம் செல்ல வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் பயிற்றுநர் பொப்வூல்மர் வீரர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது கருத்தைத் தெரிவிக்கும்போது, இந்தப் போட்டியுடன் வீரர்கள் திருப்திகொள்ள முடியாது என்றும் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்றும் வீரர்களுக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறும்போது, அணி சரியான வழியில் செல்லும் முதல்படியே இதுவெனக் குறிப்பிட்ட அவர் அன்று களத்தில் புகுந்ததும் போட்டியைத் தோல்வியிலிருந்து பாதுகாக்கும் எண்ணத்திலேயே இருந்ததாகவும் அக்மல்,ரசாக் இருவரினதும் துடுப்பாட்டமும் பிரமாண்டமாக இருந்ததாகவும் கூறியுள்ளார்.



பார்சிலோனாவில் நடந்த ஸ்பானிஷ் முதல் டிவிசன் கால்பந்துப் போட்டியில் பார்சிலோனா அணி 2–0 என்ற கோல் கணக்கில் அத்லடிக்கிளப் அணியை வீழ்த்தியது. அத்லடிக் அணியின் முரிலோ (இடது) பந்தைத் தட்டிச் செல்ல விடாமல் கையால் தடுக்கிறார். பார்சிலோனாவின் மேக்சி லோபஸ் (நடுவில்)

# கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டி உழவர் ஒன்றியம் இளந்தென்றல் அணிகள் சம்பியன்



கரைச்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு போட்டியின் ஆரம்ப நாளாகிய நேற்று எல்லே போட்டி கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.


போட்டியின் முதற் சுற்றிற்கு கிளி- மத்தியகல்லூரி மாணவர்களின் அணியும், உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியும் போட்டியிட்டன.

தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட ஒன்பது அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் பெண்கள் அணியில் இறுதிப் போட்டிக்கு உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணியும், வட்டக்கச்சி இளந்தளிர் அணியும் தெரிவாகியிருந்தன இதில் உழவர் ஒன்றிய அணி 1-0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஆண்கள் அணியில் இறுதிப் போட்டிக்கு அம்பாள்குளம் இளந்தென்றல் அணியும் கிளி. புதிய கல்விநிலையம் (NEC) அணியும் போட்டியிட்டது. இதில் இளந்தென்றல் அணி 1-0 என்றபுள்ளிக்கணக்கில் வெற்றி பெற்றது. மேற்படி புள்ளியை த.றதீஸ்காந் பெற்றுக்கொடுத்து அணிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

நேற்றைய எல்லே போட்டிகளுக்கு பிரதமதீர்ப்பாளராக பி. சாண்டைஸ் அவர்களும் மற்றும் கலாதரன், சிவநேசன் ஆகியோர் கடமையாற்றினர். அத்துடன் இன்று கிளி. உதய தாரகை விளையாட்டு மைதானத்தில் ஆண்,பெண், இரு பாலாருக்குமான கபடிப்போட்டி காலை 9.00மணிக்கு ஆரம்பமாகும் என கரைச்சிப்பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் சிவநேசன் தெரிவித்துள்ளார். (கு)

# பந்துவீச்சாளர் அக்தருக்கு உடல் தகுதி சோதனை



பாக். பந்து வீச்சாளர் அக்தருக்கு உடல்தகுதி சோதனை நடத்தப்பட உள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை வேகப் பந்து வீச்சாளர் அக்தர், தோள்ப்பட்டை வலிகாரணமாக அவுஸ்திரேலியப் பயணத்தின்போது பாதியில் தாயகம் திரும்பிய அக்தர் இந்தியாவுக்கு எதிராக தற்போது நடந்து வரும் டெஸ்ட் போட்டியில் இடம்பிடிக்கவில்லை. இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆட அக்தர் விருப்பம் தெரிவித்தார். இதையடுத்து அக்தர் மற்றும் ஷபீர் ஆகய இருவருக்கும் இன்னும் மூன்றுநாட்களில் உடல் தகுதி பரிசோதனை நடக்கவுள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் ஷாரியார்கான் நிருபர்களிடம் கூறுகையில்,"காயம் காரணமாக ஓய்வு எடுத்துவரும் வீரர்களான அக்தர், ஷபீர் ஆகியோருக்கு இன்னும் மூன்று நாட்களில் [illegible]தகுதி சோதனை செய்யவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# 400 மீற்றர் ஓட்டப் போட்டி கிளமென்ட் புதிய உலகசாதனை


அமெரிக்க உள்ளரங்கு தடகள சம்பியன்ஷிப் போட்டியில் கெர்ரான் கிளமென்ட் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.




அமெரிக்காவின் பயட்டிவில்லி நகரில் நடக்கும் இப்போட்டியில் ஆண்களுக்கான 400 மீற்றர் ,ஓட்டம் கடந்த சனியன்று நடந்தது. இதில் பங்கேற்ற 19 வயதான கிளமென்ட் 44.57 வினாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து முதல் இடம் பிடித்தார். இதில்,இவர் புதிய உலக சாதனையையும் படைத்துள்ளார். ஐந்துமுறை ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மைக்கேல் ஜோன்சன் 1995 நிகழ்த்திய 44.63 வினாடிகளில் சாதனையை கிளமென்ட் முறியடித்துள்ளார்.

# உடன் பதிவினை மேற்கொள்ளவும்

வீர வீராங்கனைகளுக்கான வடகிழக்கு மாகாண சைக்கிள் ஓட்டப் போட்டி 19,20 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.இதில் கலந்து கொள்ள விரும்பும் கிளிநொச்சி மாவட்ட வீர வீராங்கனைகளை கிளி மாவட்ட அரச செயலகத்தின் விளையாட்டு பகுதியில் அலுவலக நேரத்தில் வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிமாவட்ட விளையாட்டு அதிகாரி சு.கனகராசா அறிவித்துள்ளார்.



**சிந்தனைக்கு**

சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம், பொருளாதார வாழ்வில் தன் சொந்தக்கால்களில் நிற்க வேண்டும்; அத்தகைய இனத்தால்தான் சுதந்திரத்தை அனுபவிக்க இயலுமென்பது நியதியாகும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

# நம்பிக்கை கொள்ளல்?

சுனாமி நிவாரணம் விநியோகிப்பதில் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவதற்கு சிறிலங்கா அரசும்-விடுதலைப்புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளதாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் வெளியிட்ட கருத்துக்கள், 'சுனாமி' அனர்த்தம் தொடர்பான நிவாரணப்பணிக்கெனக் கிடைக்கப்பெற்ற நிதியை விடுதலைப்புலிகளுடன் பகிர்ந்து கையாள்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அர்த்தம் கொள்ளப்பட முடியுமா? ஜோன் பீற்றர்சன்னின் கருத்துக்களின் பின்னான தமிழ்மக்களின் மத்தியிலுள்ள முக்கிய கேள்வியாகும்.

ஏனெனில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டதாக எமக்கு கிடைக்கப்பெற்ற செய்தியில், நிவாரணம் விநியோகிப்பதில் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதே ஒழிய நோர்வே அரசு முன்வைத்துள்ள பொதுக்கட்டமைப்பிற்கான வரைவை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொண்டதாகத் தகவல் ஏதும் இல்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்து நோர்வேத்தரப்பு முன்வைத்துள்ள நிவாரணப்பணிக்கான பொதுக்கட்டமைப்பிற்கான வரைவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நோர்வேத்தரப்பிடம் புலிகள் தெரிவித்துவிட்டதோடு, இதனை ஊடகங்கள் ஊடாக மக்களுக்கும் தெளிவு படுத்திவிட்டனர்.

ஆனால் சிறிலங்கா அரசதரப்பில் இருந்து எத்தகையதொரு அறிவிப்பும் இதுவரை வெளிவந்ததாக இல்லை. சிறிலங்கா ஆட்சியாளர்களிடம் பேச்சு நடத்தும் நோர்வேத்தரப்பினரே இது குறித்து நம்பிக்கையை வெளிப்படுத்துபவர்களாக உள்ளனர். அதாவது அரசாங்கமும் நிவாரணப்பணிகள் குறித்து ஓர் இணக்கத்திற்கு வர விருப்பம் தெரிவித்ததாக நோர்வேத்தரப்பு கூறிக்கொள்கின்றது.

இந்நிலையிலேயே அரசாங்கம் பொதுக்கட்டமைப்புக் குறித்து விருப்பம் தெரிவித்ததா? இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது. அதாவது நிவாரணப்பணிகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயலாற்ற பேச்சளவிலான உறுதி மொழியை அரசாங்கம் அளித்துள்ளதா? அன்றி நிவாரணப்பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க அரசாங்கம் விருப்பம் வெளியிட்டுள்ளதா? என்பதே கேள்வியாகும்.

இதில் விடுதலைப்புலிகளுடனான இணக்கப்பாட்டுடன் செயற்பட அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது என்ற நிலை மட்டுமே இருக்குமானால் அதில் எந்தளவிற்கு பயன்உண்டு? அது ஒரு புது முன்னேற்றகரமான விடயமாகக் கொள்ளத்தக்கதா? என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் அரசாங்கம் சுனாமி விவகாரத்தில் மட்டுமல்ல வடக்கு-கிழக்குத் தொடர்பான எத்தகைய விடயங்களிலும் இவ்வாறு கூறுவது வழமையானதொன்றே.

இனப்பிரச்சினை தொடர்பாக எந்த விடயமும் விடுதலைப்புலிகளுடனேயே கையாளப்பட வேண்டும் என்பது ஏற்கனவே உறுதியாகிவிட்டதொன்று. விடுதலைப்புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் அர்த்தமற்றனவாகித் தோல்வியில் முடிவடைந்தமை கடந்த கால நிகழ்வுகளாகும். ஆகையினால் சுனாமி அனர்த்தம் தொடர்பான நிவாரண நடவடிக்கைகளிலும், விடுதலைப்புலிகள் சேர்த்துக்கொள்ளப்படுதல் என்பது அவசியமானது என்பது அனைவராலும் உணரப்பட்டதாகவும், வெளிப்படுத்தப்படும் ஒன்றாகவுமே உள்ளது.

ஆகையினால் அரசாங்கம் விடுலைப்புலிகளுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதில் விருப்பம் கொண்டிருத்தல் அன்றி அது குறித்த செய்தியை வெளியிடுதல் என்பது சூழ்நிலையின் நிர்ப்பந்தமாகும். ஆனால் இவ் நிவாரணப்பணிகளுக்கென வகுக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பினை ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பது வேறுவிடயமாகும்.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் விருப்பத்தை வெளிப்படுத்துவது மட்டும் போதாது. பொதுக்கட்டமைப்பை ஏற்றுக்கொண்டு செயலாற்ற முன்வருதல் வேண்டும். அவ்வாறு இல்லாது விடில் நிவாரணப்பணி விடயத்தில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் கண்டுவிடுதல் என்பது சாத்தியப்படானதொன்றாக இருக்கமாட்டாது.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவும் சரி, அவரது பரிவாரங்களும் சரி நேரத்திற்கு நேரம் ஒவ்வொன்று பேசக்கூடியவர்கள். அதேசமயம் ஆட்சியில் பங்கேற்கும் இவர்களின் கூட்டாளிகள் தமிழ்மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதை மட்டும் எதிர்ப்பவர்கள் அல்ல. தமிழ் மக்களுக்கு அனுப்பப்பட்ட நிவாரணங்களைக் கூட தட்டிப்பறிக்கக் கூடியவர்கள். ஆகையினால் அரசின் இணக்கம் என்பது எதுவென்பது குறித்த தெளிவு கிடைக்கப்பெறாதவரை இதில் நம்பிக்கை கொள்ள எதுவுமே இல்லை.

# கிராமிய அ.வ 12 ஆவது அகவை நிறைவு விழா

## கிளை மட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள்

கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆவது அகவை நிறைவு விழா நிகழ்வுகள் நேற்று வங்கியின் கிளைகள் மட்டத்தில் நடைபெற்றன.

**பூநகரியில்:-**

பூநகரிக் கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையில் மேலாளர் க. கௌரிசங்கர் தலைமையில் பி.ப 12.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. இந் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி. கரிகாலன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் தளிர் சிறுவர்கள் சேமிப்பில் அதிகூடிய சேமிப்பாளர்களுக்கான பரிசு எட்டுச் சிறுவர்களுக்கும், குலுக்கல் மூலம் மூன்று சிறுவர்களுக்கும், பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன் ஒன்பது பயனாளிகளுக்கு சூரியமின் ஒளி கடன் திட்டத்தின் கீழ் சூரிய மின்கலத் தட்டுக்களும், ஐந்து பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், ஒரு பயனாளிக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் கடனாக வழங்கப்பட்டது.

**மல்லாவியில்:-**

மல்லாவிக் கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளையில் மேலாளர் செல்வி. இந்துமதி தலைமையில் காலை 9.30 மணிக்கு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் தளிர் சிறுவர்களுக்கான சேமிப்பில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கான பரிசுகளும் ,மூன்று பயனாளிகளுக்கு சூரிய மின் ஒளி கடன் திட்டத்தின் கீழ் சூரிய மின் கலத் தட்டுக்களும் வழங்கப்பட்டன.

**நெடுங்கேணியில்:-**

கிராமிய அபிவிருத்தி வங்கி வவுனியாக் கிளையின் மேலாளர் செல்வி. யாழினி தலைமையில் நெடுங்கேணி விவசாயப் போதனாசிரிய அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் 13 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், பத்துப் பயனாளிகளுக்கு சூரியமின்கலத் தட்டுக்களும் கடனாக வழங்கப்பட்டது.

**ஒட்டுசுட்டானில்:-**

கிராமிய அபிவிருத்தி வங்கி முல்லைத்தீவுக் கிளைக்குரிய நிகழ்வு கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் பிரதேச இணைப்பாளர் தயாபரன் தலைமையில் பி.ப மூன்று மணிக்கு நடைபெற்றது. இதில் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந் நிகழ்வில் மூன்று பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், எட்டு, பயனாளிகளுக்கு சூரிய மின்கலத் தட்டுக்களும், ஒரு பயனாளிக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் கடனாக வழங்கப்பட்டதுடன், சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் 19 பயனாளிகளுக்கு ரூ- 645000/- கடனாக வழங்கப்பட்டது. தளிர் சிறுவர் சேமிப்பில் அதிகூடிய சேமிப்பாளர்களுக்கான பரிசும் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சேமிப்பாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

**முள்ளியவளையில்:-**

கிராமிய அபிவிருத்தி வங்கி முள்ளியவளையில் கிளை மேலாளா தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் 18 பயனாளிகளுக்கு ரூ. 405000/- கடனாக வழங்கப்பட்டது. தளிர் சிறுவர் சேமிப்பில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

**மன்னார்:-**

கிராமிய அபிவிருத்தி வங்கி அடம்பன் கிளையில் கிளை மேலாளர் சி.சத்தியகுமார் தலைமையில் ஆரம்பமாகியது இந் நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ப.சுஜன் அடகுக் கடன் திட்டத்தினை ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றினார். (24)

# சுங்கத் திணைக்களத்தின் பணிகளை கடற்படையிடம் ஒப்படைத்ததற்கு எதிர்ப்பு

## -சுங்கத்திணைக்கள ஊழியர்கள் போராட்டம்

சுங்கத்திணைக்களத்தின் பணிகளை கடற்படையிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைக்கு சுங்கத் தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். சுங்கத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த பரிசோதனை நடவடிக்கைகளை அரசாங்கம் கடற்படையிடம் ஒப்படைத்துள்ளது. இதற்கு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ள சுங்கத் திணைக்கள ஊழியர்கள் தொழிற் சங்கச் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். யுத்த காலத்தின் பொழுது கூட தாங்களே இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததாகவும் தற்போது நாட்டில் அவ்வாறான போர்ச் சூழல் கூட ஏற்படாத நிலையில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையினைத் தாங்கள் கண்டிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (32)

# சுனாமி அழிவுகள் குறித்து ஆராய ஜப்பானிய குழு இலங்கைவருகின்றது

சுனாமி அழிவுகளை ஆராய்வதற்கான ஜப்பானிய அரசின் பிரதிநிதிகள் குழு ஒன்று இவ்வாரம் இலங்கை வரவுள்ளது. இதில் 12 அமைச்சுக்களிலுள்ள 32 நிபுணர்கள் உள்ளடங்குகின்றனர் என கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நில, சமூகக்கட்டமைப்பு, முகாமைத்துவ தேசிய நிறுவகப் பணிப்பாளர் ரட்சுவோ கமாகுசி தலைமையில் காணி, போக்குவரத்து அமைச்சுக்களிலிருந்து இந் நிபுணர்கள் எதிர்வரும் 17 ஆம்திகதி இலங்கை வரவுள்ளனர்.

அவர்களின் விஜயத்தின் போது சிறிலங்காவில் அழிவு முகாமைத்துவத்தொகுதி விஸ்தரிப்புத் தொடர்பாகத் தமது அனுபவத்தையும் அறிவையும் பகிர்ந்து கொள்ளவுள்ளார். அத்துடன் சுனாமியால்பாதிப்படைந்த தெற்கு, கிழக்கு பகுதிகளிற்குச் செல்லவுள்ளதுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் ஆராய்வர் எனத் தெரிவிக்கப்பட்டுகிறது.

# சுனாமி நிவாரணப் பொருட்கள் வந்த 110 கொள்கலன்கள் துறைமுகத்தில்

கொழும்புத் துறைமுகத்தில் 110 கொள்கலன்கள் இதுவரை அரசாங்கத்தால் பொறுப்பேற்றகப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து சமூக சேவைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுனாமி அனர்த்த நிவாரணப் பொருட்களே துறைமுகத்தில் தேங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கலன்களைப் பொறுப்பேற்பதற்கு சமூக சேவைகள் அமைச்சு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றிற்கான துறைமுகக்கட்டணங்களைச் செலுத்துவதற்குரிய நிதி இதுவரை திறைசேரியால் ஒதுக்கப்படாமையே இதற்குக காரணம் என அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

# இலங்கை திரும்பியது

சுனாமியின்போது தவறவிடப்பட்டு, பின் மீட்கப்பட்டுப் பெற்றோரிடம் கையளிக்கப்பட்ட பேபி 81 என்று அழைக்கப்படும் ஐந்து மாதக் குழந்தை அமெரிக்காவிலிருந்து இலங்கை திரும்பியுள்ளது. அமெரிக்க ஊடகமொன்றின் சிறப்பு நிகழ்சிக்கென அழைக்கப்பட்டிருந்த பேபி 81 அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை நிறைவுசெய்து கொண்டு நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டு வாரங்கள் பெற்றோருடன் குழந்தை அமெரிக்காவில் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. (32)

# ஆரயம் பதி பி.செ. ஊழியர்கள் ஆர்ப்பாட்டப் போராட்டம்

மட்டக்களப்பு ஆரயம்பதிப் பிரதேச செயலர் பிரிவு ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். நேற்று முன் தினம் தம்மீது மக்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது எனவும் குற்றம் சாட்டியுள்ளதுடன், தாம் தமது கடமைகளைப் புரிய பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் எனவும் கோரியுள்ளனர். அத்துடன் தமது பிரதேச செயலர் கைது செய்யப்பட்டதாக நேற்று முன்தினம் பொலிசார் தெரிவித்த கருத்தும் தவறானது எனவும் தெரிவித்துள்ளனர். (32)

-நல்ஆயன் சபையின் நிதியுதவியில்-

# முல்லைத்தீவில் 15 படகுகள்,வலைகள் பாதிக்கப்பட்டோருக்கு கையளிப்பு

முல்லைத்தீவுப்பிரதேச பங்குத் தந்தையின் அனுசரணையில் அருட்சகோதரிகளின் நல்ஆயன் சபையினரின் நிதி உதவியில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினரால் நேற்று15 படகுகளும், வலைகளும், இயந்திரங்களுக்கான சமாசத்தின் காசோலைகளும் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைவர் அ.மரியராசா தலைமையில் 10.00 மணிக்கு சமாசத்தின் படகு வழங்கும் வைபவம் ஆரம்பமானது தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் நிர்வாகப்பொறுப்பாளர் கண்ணதாசன் ஏற்றினார். மங்கல விளக்கை முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார், நல்ஆயன் சபை தலைவி அருட்சகோதரி அனிற்றா ஆகியோர் ஏற்றி வைத்தனர் தொடர்ந்து படகு, வலைகள் வழங்குவது தொடர்பான கருத்துரையை முல்லை பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார், நல்ஆயன் தலைவி அனிற்றா கடற்புலிகளின் பிரதிநிதி க.விநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து வலைகளும், படகுகளும், இயந்திரங்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன. இதனை நல்ஆயன் சபைத் தலைவி அனிற்றா, முல்லைத் தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ்பத்திநாதன் அடிகளார், செயலணிப் பொறுப்பாளர் மாறன், முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் மூர்த்தி, கடற்றொழிலாளரின் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் அ.மரியராசா ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் போராளிகள்,மீனவர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தப் 15 படகுத் தொகுதிகளுக்கும் 60 இலட்சம் ரூபாவினை நல்ஆயன் சபையினர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (20)

# புலிகள் மீதான தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பற்றி அறிவிப்பு

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலங்களில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியைக் கண்டறிவதற்காக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வினால் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழு தொடர்பான விபரங்களை சனாதிபதி செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கும், மார்ச் மாதம் இரண்டாம் திகதிக்குமிடையில் இம் மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்கள், விடு தலைப்புலிகள், இராணுவம், பொலிஸ ஆகிய தரப்புகளிடமிருந்து சாட்சியங்களை ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

சாட்சியமளிக்க விரும்புபவர்கள் இம் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னதாக அம்பாறை மேல் நீதி மன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

எழுத்து மூல சாட்சியங்களும் ஏற்றுக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தலைவராகவும் உறுப்பினராக அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. ரி.எம்.வி. வெரவெவவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். செயலாளராக காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ.எல். எம்.பலீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம் மாதம் 28ஆம் திகதி முதல் ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி வரை அம்பாறை மேல் நீதிமன்றத்திலும் ஏப்பிரல் நான்காம் திகதி முதல் எட்டாம் திகதி வரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலும் ஆணைக்குழு கூடி விசாரணைகளை நடத்தவுள்ளது.

## பெண்கள்...

இதில் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன் மாவை சேனாதிராசா, சிவனேசன் ஆகியோர் உரையாற்றினர்.

(41,28,27,33,36)

## பாலியல்...

வகுப்பின்போது சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மூதாட்டி தன் மீது பாலியில் வல்லுறவு புரிய முற்பட்ட சிப்பாயை இனம் காட்டினார்.

யாழ். மாவட்ட மேலதிக பதில் நீதிபதி சி. கேசவன் தலைமையில் நடைபெற்ற இவ் அடையாள அணிவகுப்பில் எட்டு இராணுவச்சிப்பாய்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது அடையாளம் காணப்பட்ட இராணுவச்சிப்பாய் மீது நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக அவரைத் தொடர்ந்து யாழ். சிறையில் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை மேற்படி இராணுவச்சிப்பாய் காங்கேசன்துறை இராணுவமுகாமைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகின்றது. (27,33)

## திருமலையில்...

திற்கும் சில ஊழியர்களே வருகை தந்திருந்தனர். சகல பகுதிகளிலும் பொது மக்களின் நடமாட்டம் காணப்படவில்லை. போக்குவரத்து சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இயங்கின.

இக்கதவடைப்பின் ஒரு பகுதியாக கடல் கோளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒன்றுதிரண்டு ஏகாம்பரம் வீதி, பன்னத்தோட்டம் ஆகிய பகுதிகளில் வீதிக்குக் குறுக்காக அமர்ந்தும் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொலிசார் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியிருந்தனர். ஆனால் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

கடல் கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் காட்டப்படும் பாரபட்சத்தைக் கண்டித்தும், சர்வதேச சமூகம் வழங்கும் நிவாரண உதவிகள் தமிழ் பேசும் மக்களுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கப்படாததைக் கண்டித்தும், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி சிறுபான்மை இனமக்களை நசுக்குவதைக் கண்டித்தும், திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதைக் கண்டித்தும் இந்தக் கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. (25)

## கழுத்தில்...

புலோலி வடக்கைச் சேர்ந்த தேவராசா பிரசாத் என்பவரே நேற்றுக் காலை அவரது வீட்டிற்கு அடுத்துள்ள வெற்றுக்காணியில் உள்ள வேப்ப மரம் ஒன்றில் மின்சார வயரினால் கழுத்தில் சுருக்கிட்டு இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

## அரசாங்கத்திட...

ஏனெனில் எங்களுடைய தாயகப் பிரதேசம்தான் கூடுதலான அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்திருக்கின்றது. ஏற்கனவே யுத்தத்தாலும் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள பிரதேசம் என்ற வகையிலும் சுனாமியாலும் பேரழிவுகளைச் சந்தித்துள்ள பகுதிஎன்ற வகையிலும் எங்களுடைய பகுதிகளுக்கு சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்கோடுமே இந்தப் பயணத்தை மேற்கொண்டோம்.

நோர்வேத்தரப்பினர் நாங்கள் சர்வதேச உதவிகளைப் பகிர்வதில் மிகவும் அக்கறையாகவும் ஆர்வமாகவும் இருக்கின்றார்கள்.

இரண்டு தரப்பும் இணைந்த ஒருகட்டமைப்பை நிறுவி அதற்கூடாகச் சர்வதேச உதவிகளைப் பகிர்வ தற்கு மிகவும் அக்கறையோடும் ஆர்வமாகவும் இருக்கிறார்கள்.

ஏற்கனவே இருதரப்பும் பரிமாறிய ஆலோசனைகளில் எவ்வித தீர்வும் ஏற்படாத நிலையில் நோர்வேத் தரப்பு ஓர் ஆக்கபூர்வமான யோசனையை முன்வைத் திருக்கின்றது. அதனை எங்களுடைய தலைமைப்பீடம் சாதகமாகப் பரிசீலித்து எங்களுடைய இணக்கப்பாட்டை நாங்கள் தெரிவித்துள்ளோம்.

தற்பொழுது அரசாங்கத்திடம் இருந்து எங்களுக்குப் பதில் கிடைக்காத காரணத்தினால் முழுமையான ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியாத சூழல் இருக்கின்றது. அந்த வகையில் அவர்களோடு உரையாடுகின்ற பொழுது அவர்கள் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டிருப்பதை உணரக்கூடியதாக இருந்தது என்றார். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்கள்.

இதேவேளை சமாதானப் பேச்சுவாத்தைகள் மீண்டும் தொடங்குவது தொடர்பாக அவர் கருத்துக்கூறுகையில்,

தற்போதுள்ள சூழலில் யுத்தத்தினால் கடந்த இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக பேரழிவுகளையும் பெரும் மனிதாபிமான நெருக்கடிகளையும் சந்தித்துள்ள மக்களுக்கு உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் தேவை இருந்ததன் அடிப்படையில்தான் நாங்கள் ஓர் இடைக்காலத் தீர்வு யோசனையை முன்வைத்தோம் அதன் அடிப்படையில் பேசவும் நாங்கள் தயார் எனவும் கூறி இருந்தோம்.

இதற்குப் பின்னால் இந்தச் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு எங்களுடைய தேசத்தின் பெரும் பகுதி எங்களுடைய கரையோரப் பகுதி முழுமையாக அழிந்த நிலையில் இருக்கின்றது. ஆகவே இப்பொழுதொரு மிகமோசமான மனிதாபிமான நெருக்கடியினை எங்களுடைய மக்களும் தேசமும் சந்தித்து நிற்கும் இந்த நிலையில் நாங்கள் உடனடியாக அந்த மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது பற்றியே கூடுதலான கரிசனையும், அக்கறையும் கொண்டுள்ளோம் அதனையே எங்களுடைய நிலைப்பாடாகவும் வலியுறுத்தி இருக்கின்றோம்.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது பற்றி அவர்கள் பெரிதாக ஒன்றும் விவாதிக்கவில்லை உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகளை கையாள்வது சம்பந்தமாகவே உரையாடல்கள் அமைந்திருந்தன. எனக் கூறினார். இதேவேளை மேலும் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லவிருப்பதால் அங்குள்ள வெளியுறவு அமைச்சர்களையும் அமைச்சு அதிகாரிகளையும் சந்திப்பதே முக்கிய நோக்கம். எனஅரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

# வவுனிக்குளத்திலிருந்து கொழும்பு சென்ற குடும்பஸ்தரைக் காணவில்லை

வவு. மனித உரிமைக்குழுவிடம் முறையீடு

(வவுனியா)

வன்னியில் இருந்து கொழும்பிற்குச் சென்ற குடும்பஸ்தர்ஒருவர் காணாமல் போயுள்ளதாக வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

முதலாம் யுனிற், பாலிநகர், வவுனிக்குளத்தைச் சேர்ந்த கதிரவேலு கோபாலபிள்ளை (வயது-40) என்பவர் கடந்த சனவரிமாதம் 25ஆம்திகதி ஓமந்தை சோதனை நிலையம் ஊடாக கொழும்புக்குச் சென்றிருந்தார். இவரையே இன்று வரை காணவில்லை என அவரது மனைவி மாலினி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர் அன்றைய தினம் 50,000ரூபா பணத்தினையும் எடுத்துச் சென்றுள்ளதாகவும், இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளதாகவும் அவரின் மனைவி மேலும் தெரிவித்துள்ளார். (10)

# வல்வெட்டித்துறை மீனவர்கள் இருவர் சிறிலங்கா கடற்படையால் கைது

காங்கேசன்துறை அதிஉயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதியில், அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடியில் ஈடுபட்டதாகக் கூறி மீனவர்கள் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியினைச் சேர்ந்த சிவராஜ் பிரபு (வயது 24) மற்றும் ஜோசப் பிறேமதாஸ் (வயது38) ஆகிய இருவருமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை கட்டுமரமொன்றில் மீன் பிடிக்காக பாய்மரங்களைப் பயன்படுத்திச் சென்றிருந்த அவர்கள், காங்கேசன்துறை கடற்படைத்தளத்தையண்டிய சேந்தான்குளம் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையமூடாக நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டவர்களது குடும்பத்தவர்களின் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறை கடற்படைத் தளத்திலிருந்து கடற்படை ரோந்துப் படகு மூலம் பருத்தித்துறைப் பகுதிக்கு அழைத்துவரப்பட்ட இம் மீனவர்கள் இருவரும் பருத்தித்துறைப் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டனர். அவ்வாறு கையளிக்கப்பட்டவர்களை குடும்பத்தவர்கள் சந்திக்க அனுமதிக்கப்பட்டிருந்தது. (27)

## மட்டு...

அரசியல் துறைப்பொறுப்பாளர் அன்புமாறன் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடித்த வேளையில் அலுவலகத்தில் குறைந்தது 15 பேராவது இருந்ததாகவும், இருப்பினும் யாருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உந்துருளியில் அவ் வீதி வழியாகச் சென்ற இரண்டு பேர் கைக்குண்டைவீசியுள்ளார்கள்.அது அலுவலகமுன்பக்கச் சுவரில் விழுந்து வெடித்துள்ளமையினால் குறிப்பிடத்தக்க சேதங்கள் எதுவும் நிகழவில்லை.

அரசடிச் சந்திக்கருகே அமைந்துள்ள இந்த அலுவலகத்திற்கு அண்மையில் சிறிலங்கா பொலிஸ் நிலையமொன்று உள்ளது.

இதுதவிர, தாமரைக்கேணி வீதியிலிருந்து மகாஜனாக் கல்லூரிக்கு வரும் பாதையின் ஆரம்பத்தில் பொலிஸ் சோதனைச் சாவடியும் உள்ளது. இவற்றைத் தாண்டி வந்து இந்தக் கைக்குண்டு வீச்சை நடாத்திவிட்டு மீண்டும் தப்பிச் செல்வதற்கு சிறிலங்காப் பொலிசாருடனும், சிறிலங்கா இராணுவத்துடனும் இணைந்து செயற்படும் இனவிரோதக் குழுக்களினதும் உதவியின்றிச் செய்யமுடியாது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடததியதாகத் தெரியவருகிறது.

கடந்த ஆறு மாதங்களுக்குள், இந்த அரசியல் அலுவலகத்தின் மீது நடாத்தப்பட்ட நான்காவது குண்டுத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை பதில் நீதவான் குமாரசுவாமி மாணவனின் சடலத்தை மந்திகை வைத்திய சாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டதுடன் மேலதிக் விசாரணைகளை நாளைவரை ஒத்திவைத்துள்ளார். வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடத்திய மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி க.கதிரவேற்பிள்ளை அறிக்கை சமர்ப்பித்துள்ளார். (கா)


# சாவு அறிவித்தல்

## நீக்கிலப்பிள்ளை சுவாம்பிள்ளை

*(மாரீசன் கூடல்,இளவாலை)*

மலர்வு :-24.06.1931 உதிர்வு :-12.03.2005

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை தங்கமுத்து அவர்களின் அன்புமகனும், காலஞ்சென்ற வத்தலோம் பிள்ளையின் அன்புச் சகோதரரும், நீற்றாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டெறி, டயஸ் (ஜேர்மன்), அருட்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் (றெறோம்) மு.ஆ.இ அமலி (கனடா), நிமலி (ஜேர்மன்), றமேஸ் (கனடா), மாலினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்தாஸ், வசந்தகுமாரி, கெனடி, பெஸ்லி ஆகியோரின் மாமனாரும், டிலான், டினுசியா, டெனிஸ், கிறிஸ்ரின், டிருஸன், டில்ஸான் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:-**

(5372) **மகன்-அருட்தந்தை S.ஸ்ரனி (ஜெறோம்)**


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது